# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 5. அத்தியாயம் 1.

## முதல் அனுபவம்.

நான் தாய்நாடு வந்து சேர்வதற்குள் போனிக்ஸிலிருந்து புறப்பட்டிருந்த கூட்டத்தார் முன்னரே இங்கு வந்து சேர்ந்திருந்தார்கள். ஆனால் எங்கள் திட்டப்படி நானே முதலில் வந்திருக்க வேண்டுமாயினும் நான் எதிர்பாராத வண்ணமாக இங்கிலாந்தில் யுத்த சம்பந்தமாய்த் தங்கிவிட நேர்ந்தபடியாலும், எங்கள் திட்டம் தவறிவிட்டபடியாலும் போனிக்ஸிலிருந்து வந்த கூட்டத்தாருக்கு சௌகரியமான இடவசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது என் கடமையாக இருந்தது. அவர்களை எந்த ஆசிரமத்தில் எங்கே தங்கச் சொல்வதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆதலின் நான் அவர்களுக்குத் தந்தி கொடுத்து ஸ்ரீ. ஆண்டுரூஸைச் சந்தித்து அவர் சொல்கிறபடி நடந்து கொள்ளும்படி அறிவித்தேன்.

எனவே அவர் காங்கரி குரு குலத்தில் தங்கவேண்டியதாயிற்று. அப்போது அவர்களை காலஞ் சென்ற சுவாமி சிரத்தானந்தர் மிக அன்புடன் நடத்தினர். பிறகு அவர்கள் சாந்திநிகேதனத்தில் தங்க நேர்ந்த போதும் கவி ரவீந்திர நாதரும், அவருடைய சிஷ்யர்களும் அவர்களை மிக்க அன்புடனேயே நடத்தினர்கள். அவர்கள் இவ்விடங்களில் பெற்ற அனுபவங்கள் எனக்கும் அவர்களுக்கும் மிக்க உதவியாயிருந்தன.

இந்தக் கவி ரவீந்திரரும், சுவாமி சிரத்தானந்தரும், ஆசிரியர் சுசிலருத்ராவும் ஸ்ரீ. ஆண்டுரூஸுக்கு மும்மூர்த்திகளாக விளங்கினர்கள். ஸ்ரீ. ஆண்டுரூஸ் தென்னாப்பிரிக்காவில் எப்போதும் காலத்திலும் அகாலத்திலும் இந்த மும்மூர்த்திகளைப் பற்றியே அதிகம் பேசி வருவார். ஆதலின் ஸ்ரீ. ஆண்டுரூஸ் போனிக்ஸ் கூட்டத்தாருக்கு ஆசிரியர் சுசிலருத்ராவுடனும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்திவைத்தார். இந்த ஆசிரியருக்குத் தனி ஆசிரமமில்லாவிட்டாலும் தமது வீட்டையே இக்கூட்டத்தார் சுவாதீனத்தில் ஒப்படைத்துவிட்டார். அவர்கள் ஆசிரியருடைய இல்லத்தை போனிக்ஸே என்று கருதும்படி அவ்வளவு சௌகரியங்களை யடைந்தார்கள்.

நான் பம்பாய்க்கு வந்து இறங்கிய போது போனிக்ஸ் கூட்டத்தார் சாந்திநிகேதனத்தில் இருப்பதாக அறிந்து கொண்டேன். ஆதலின் நான் கோகலேயைச் சந்தித்தவுடன் இக்கூட்டத்தாரைக் காண விரும்பினேன்.

### பம்பாயில் வரவேற்பு.

பம்பாயில் எனக்களித்த வரவேற்பின் போது நான் சிறு சத்தியாக்கிரகமொன்று செய்வதற்குச் சௌகரியம் வாய்த்தது. ஸ்ரீ. ஜஹாங்கீர் பெடிட் வீட்டில் எனக்கு வரவேற்பு அளித்த போது குஜராத்தியில் பேச எனக்குத் தைரியமில்லை. நாகரீகம் அதிகமாக நிலவிக்கொண்டிருந்த அக்கூட்டத்தில் தொழிலாளிகளுடனேயே நெருங்கி வசித்து வந்த எனக்கு தைரிய மிருக்கவில்லை. அப்போது நான் கத்தியவார் முறையில் உடையணிந்திருந்தேன். அது இப்போது நான் இருப்பதைவிட நாகரீகமானதாகவே தோன்றிய போதிலும் அந்த மாளிகையில் இருந்த நாகரீகத்தின் முன் என் அபிப்பிராயங்கள் ஏற்குமோ என்பதுதான் எனக்குச் சந்தேகமாயிருந்தது. ஆயினும் நான் ஸர். பிரோஸிஷாவின் ஆதரவில் ஒருவாறு அக்கூட்டத்தில் சௌகரியமாக இருந்து வெளிவந்துவிட்டேன்.

பிறகு குஜராத்வாசிகள் எனக்கு உபசரித்தார்கள். அது உத்தமலால் திருவேதியால் ஏற்படுத்தப்பட்டது. அங்கே நடக்கப்போகின்ற விவரங்களை நான் முன்னரையே அறிந்திருந்தேன். ஸ்ரீ. ஜின்னாவும் வந்திருந்தார். ஆனால் அவர் அக்கூட்டத்துக்குத் தலைவராக வந்தாரா என்பது எனக்கு ஞாபகமில்லை. அவர் ஆங்கிலத்தில் சுருக்கமாகவும் அழகாகவும் பேசினார். மற்றும் பலரும் ஆங்கிலத்தில் பேசியதாகவே எனக்கு ஞாபகம். நான் பேசவேண்டிய சந்தர்ப்பம் வந்தபோது குஜராத்தியில் எனது வந்தனத்தைச் செலுத்தி ஆங்கிலத்தில் பேசுவது கூடாதென்றும் மறுத்துக்கூறினேன். ஆனால் இவ்வாறு மறுக்கும்போது சிறிது யோசிக்காமலில்லை. ஏனெனின் வெளி தேசங்களில் அலைந்து விட்டு வந்த நான் நிரந்தரமாக அனுபவத்தில் இருந்து வரும் வழக்கத்தை எதிர்ப்பதென்றால் சிறிது யோசித்துத் தானே ஆகவேண்டும். ஆனால் நான் குஜராத்தியில் பேசியது பற்றி யாரும் அதிருப்தியுடன் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. உண்மையில் என் எதிர்ப்பைக் கண்டு ஒவ்வொருவரும் சந்தோஷப் பட்டதைக் கண்டேன்.

இதனால் என் புதிய அபிப்பிராயங்களைத் தைரியமாக எனது தேசத்தாருக்கு எடுத்துக் கூறலாமென்னும் தைரியம் எனக்கு ஏற்பட்டது. பம்பாயில் சில நாட்கள் தங்கிய பிறகு நான் கோகலேயைச் சந்திக்கும் பொருட்டுப் பூனாவுக்குப் போனேன்.

---

# எங்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள்.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 26-வது பிரசுரம்)

பெரியோர்களே! தாய்மார்களே!

பொங்கல் பண்டிகை வந்து விட்டது. எங்களின் இன்னுயிர் உடலை விட்டுப் பிரிவது இன்றோ நாளையோ நாங்கள் அறிந்திலோம். இந்த அழகிய உலகத்தினிடையே இயற்கை இன்பம் அனுபவிக்க ஆண்டவனால் அளிக்கப்பட்ட காலவரையளவு பெற்றோமில்லையே. எங்களில் யாராவது நோயினால் இறந்து போனால் கதறி அழுகிறோம். மனிதர்களாகிய. நீங்களும் உங்கள் இனத்தில் யாராவது இறந்தால் அலறித் துடிக்கிறீர்கள். தெய்வமே! எங்களைக் காப்பாற்று என்று ஓலமிடுகிறோம். ஆண்டவனே! என்று அழுகிறோம். அப்படியிருக்க எங்களின் இனிய உயிரைக் கொள்ளை கொள்ள உங்களுக்கு எத்தனை கொண்டாட்டம்! என்ன களியாட்டம்!! என்ன மகிழ்ச்சி!!! ஈதென்ன அநியாயம்! உங்கள் மேல் சிறு காயம் பட்டாலும் எவ்வளவு வேதனை யடைகின்றீர்கள்! அப்படியிருக்க எங்களை வீழ்த்தி கத்திகொண்டு இரத்தம் சிந்த அறுக்கும் பொழுது நீங்கள் அனுபவிக்கும் வேதனையில் பதின்மடங்கு எங்கட்கு இருக்காதா? நாங்கள் உணர்ச்சியற்ற கல்லா? மண்ணா? பெரியோர்களே! அருளாளர்களே! அன்புத்தாய்மார்களே! சற்று ஆராய்ந்து பாருங்கள். கருணைகொண்டு நோக்குங்கள். அன்புளங்கொண்டு எங்களை வதை செய்வது தர்மமா, நியாயமா என்று சிந்தியுங்கள். நாங்கள் என்ன செய்யவல்லோம்! தஞ்சம் என்று உங்களை உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம். அன்பர்களே! கருணைகொண்டு எங்கட்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்.

உங்களின் அடிவணங்கும்,

ஏழை ஆடு, கோழிகள்.

---

# வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

8-வது அத்தியாயம்.

## ஒரு மணத்திற்கு இரு மணங்கள்.

ஆனந்தபுரியில் வைதீகரின் தங்கையான கோமதி தன் கணவனைத் தூண்டி மங்கள நல்லூரிலுள்ள பரமேஸ்வரனுக்கு அவன் பிதாவாகிய வைதீகர் வந்த விபரத்தையும், கல்யாண விஷயமாய் வந்திருப்பாரெனத் தாங்கள் நினைத்த விஷயத்தையும், பின்னால் வைதீகரே விஷயத்தைச் சொல்லிய விபரத்தையும், பல் வைத்தியம் பார்க்கச் சென்றவர் வாராததைப் பற்றியும், தாங்கள் வைதீகரிடம் சொல்லியனுப்பிய பல் வைத்தியரை விசாரிக்கப் போனதில் அவர் மனைவியைக் கொன்று அந்தமானுக்குப் போய் விட்டதாகச் செய்தி கிடைத்ததென்றும் எழுதி யனுப்பினர்கள்.

சில நாட்கள் சென்றன. மங்கள நல்லூரிலிருந்து பரமேஸ்வரனா லெழுதப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அது பின் வருமாறு:—

"சுவாமி மாமா அவர்கள் சமுகத்திற்கு பரமேஸ்வரன் அநேக நமஸ்காரம். உபய க்ஷேமம். கடிதம் கிடைத்தது. படித்தறிந்தேன். என் தங்கை அசோதை திருமணத்திற்குப் பக்குவமாயிருக்கிறாள். என் கொள்கையும், தங்கள் குடும்பத்தின் கொள்கையும் அநேகமாய் ஒத்திருப்பது கடவுளின் கிருபையே. தங்கள் குமாரனும், எனது அத்தானுமாகிய சுப்பிரமணியாச்சாரியாருக்கு என் தங்கை அசோதையை மண முடிக்கலாமென எண்ணுகிறேன். என் அன்னையி னெண்ணமு மிதே. என் பிதாவு மிதைப்பற்றி முன்னமேயே சொல்லியிருக்கின்றார். பல விடங்களில் தேடியும் என் பிதா தென்படவில்லை. ஈசன் விட்டபடி விடட்டும். குடும்பம் கவலைக் குவியல்தானே. அதிலேயே மகிழ்வுட னின்பமாயிருப்பதே அறிவு. பல சகித்துத்தான் பிரபஞ்சத்தில் ஜீவிக்க வேண்டி யிருக்கிறது. அனைத்திற்கும் கோபமும் வருத்தமுமடைந்தால் ஜீவிய வாழ்க்கை நரக வாழ்க்கையாகிவிடும். தைரிய மெனும் பரியி லேறிக் கொண்டு ஊக்க மெனும் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு தீவிரமாக என் வாழ்க்கையி லிறங்கி விட்டேன். என் அன்னை இன்னும் சில தினங்களில் அவ்விடம் வருவாள். மற்ற விஷயங்கள் நேரில் பேசிக் கொள்ளுங்கள். குடும்பங்களைக் கெடுப்பதும், சந்தோஷத்தை நசுக்கும் விஷமும், தீமையே வடிவமான துமான வரதக்ஷணைப் பேயை விவேக மென்னும் கோலா லடித்துத் துரத்தி விடுவோம். அவ னன்றி யோரணுவு மசையாதன்றோ? மணம் மங்களமாய் முடிய மகேஸ்வரனைப் பிரார்த்திக்கிறேன்".

இதை அறிந்த கோமதியின் குடும்பம் சந்தோஷ சாகரத்தில் நீந்தியது.

நாட்கள் சில கழிந்தன. கோமதியின் இல்லத்திற்குப் பரமேஸ்வரனின் தாய் வந்தாள். தன் கணவனைப் பற்றிய விஷயங்களை விசாரித்து வருந்தினாள். பின் கோமதியு மவள் நாயகனும் கூறிய தைரிய வசனங்களால் தேறினாள்.

திருமணப் பேச்சு உதித்தது. கோமதியும் அவள் புருஷனும் பரமேஸ்வரனின் தாயான சரஸ்வதியும் உண வருந்திய வுடன் தாம்பூலம் தரித்துக் கொண்டு பேசினர்கள்.

சரஸ்வதி—சரி. முகூர்த்தம் எப்போது வைத்துக் கொள்வோம்?

கோமதியின் கணவன்— அடுத்த கார்த்திகை மாதம் 15௳ நல்ல முகூர்த்த தினம்.

சர—அப்படியானா லத்தினத்தையே நமது திருமண சுப தினமாக வைத்துக் கொள்வோம்.

கோமதி—வைத்துக் கொள்ளலாம். ஆனால் புத்திரி ஜானகிக்கு மணம் முடித்த பின் தான் சுப்பிரமணியனுக்கு முடிக்கலா மெனத் தீர்மானித்திருக்கிறோம்.

கோ. கணவன்—ஆம். அது தான் நியாயம். ஏனெனில் உங்களைப் போல் நாங்களும் பால்ய விவாகங் கூடாதென இதுவரை ஜானகிக்கு மண முடியாதிருந்தோம். இப்போது பக்குவமாகி ஆண்டுக ளிரண்டு கடந்து விட்டன. இனி தாமதித்தல் ஒழுங்கல்ல.

சர—உண்மை. நாங்களு மதை யுத்தேசித்தே அசோதைக்கு முதலில் மண முடிக்கத் தீர்மானித்தோம். எங்கள் வீட்டிலும் அவரில்லாததால் நீங்கள் சொல்லுகிறபடி கேட்கிறோம். அவர் திரும்பி வந்த பின் திருமணம் முடிக்கலா மென்றாலோ, பரமேஸ்வரன் இப்பொழுதே கட்டாயம் முடிக்க வேணு மெனப் பிடிவாதம் செய்கிறான்.

கோ. கணவன்—சரி. எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. அதாவது, இவ்வூரிலேயே ஒரே கல்யாணமாக பரமேஸ்வரனுக்கு ஜானகியையும், சுப்பிரமணியனுக்கு அசோதையையும் முடித்து விடுவோம். இது பல வகையிலும் சிறப்பு.

கோமதி—ஆம் ஆம்; நல்ல யோசனை. இப்படியே செய்ய வேண்டும். இது பருத்திச் செடி புடவையாகக் காய்த்தது போலிருக்கும்.

சா—இரட்டைச் சம்மதம். இருபங்கு சந்தோஷம். கொண்டையில் பூ பூத்தது போலிருக்கிறது. செலவும் சுருக்கம். இரண்டு ஜோலிகளும் ஒரே சமயத்தில் முடிந்து விடும். மிக்க நலமான தக்க யோசனை.

கோ. கணவன்—அடுத்த மாதம் 15-ந் தேதி மணம். இரு தினங்கட்கு முன்னாலேயே யிங்கு வந்துவிடுங்கள். மற்ற விஷயங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்.

கோமதியின் கணவர் உலக ஞானம் பெற்றவர். இவர் கட்டாயத்தின் பேரில் தான் முன் நமது வைதீகர் தன் புத்திரி அசோதையைப் பால்ய விவாகமென்னும் படு குழியில் தள்ளாதிருந்தார். ஏனெனில், பலவகையிலும் இவர் தயவு வைதீகருக்குத் தேவையாயிருந்தது. பால்ய விவாகம் துக்க வாழ்க்கைக்கு வித்து. பால்ய விவாகம் விளையாட்டு விவாகம். இதை விடக் கொடியதும், பாவகரமானதும், துக்கமயமானதும், இரத்தக் கண்ணீர் சிந்தக் கூடியதும் வேறொன்று மில்லை யென்பது மிகையாகா.

---

## ஓர் ஆஸ்திரியரின் அதிசய சக்தி.

பால் டைபல் என்னும் ஆஸ்திரியர் சில அதிசயமான காரியங்களைச் செய்து வருகிறாராம். அவர் கூறிய ஈட்டியினால் தன் கையைக் குத்தி ஈட்டி முனை மறுபக்கம் வரும்படி செய்கிறாராம். அதனால் யாதொரு தீங்கும் விளைவதில்லையாம். உடம்பில் எந்தப் பகுதியிலும் கொஞ்சம் சதையை வெட்டி எடுத்து விட்டுத் தமது மானத சக்தியால் சில நிமிஷங்களில் அந்த இடத்தைக் குணப்படுத்தி முன் போல் செய்து விடுகிறாராம். மற்றும் தமது மானதசக்தியினால் உடலின் எப்பகுதியிலும் காயப்படுத்தாமல் இரத்தம் தோலைப் பிளந்து பீரிட்டுக் கொண்டு வெளிவரும்படி செய்கிறாராம். அவர் உடம்பின் தசையை வெட்டிக்கொண்டு குணப்படுத்திய பின்னர், அணுதரிசனிக் கண்ணாடி மூலம் பார்த்தாலும் அங்கு வடு இருப்பதாகவே தெரியவில்லையாம். இந்த அதிசய சக்தியுள்ள மனிதர் சமீபத்தில் இங்கிலாந்துக்குச் செல்வார் என்று தெரிகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்
## 12-வது மகாநாடு,
### அருப்புக்கோட்டை.

### உபசரணைக் கமிட்டி
### அறிக்கை நிர். 1.

### உபசரணைக் கமிட்டி உத்தியோகஸ்தர்கள்.

ஸ்ரீமான்களான, ப. உ. ஆ. சிதம்பர நாடாரவர்கள் உபசரணைக் கமிட்டிச் சேர்மனாகவும், ச. வள்ளிநாயக நாடாரவர்கள் பொக்கிஷதாரராகவும், சு. ஆ. முத்து நாடாரவர்கள் ஜெனரல் ஸெக்ரட்டேரியாகவும், மு. முத்துக்குமாரசாமி நாடார், மா. கு. தங்கவேல்நாடார், ப. க. உ. அய்யாச்சாமிநாடார், சு. பொ. வடிவேல்முருக நாடார், பெ. பழனிச்சாமி நாடார், பெ. சிவ. பெருமாள் நாடார், பா. சி. சங்கரமகாலிங்க நாடார் ஆகியவர்கள் வைஸ் சேர்மன்களாகவும், சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர், ஆ. இ. ஆ. இ. அண்ணாமலை நாடார், அ. பெ. ரத்தினவேல்நாடார், பெ. சிவ. பெ. ஞானநாத நாடார், மா. உ. மாயாண்டி நாடார், வ. சி. பெ. நாகலிங்க நாடார். அ. கு. அண்ணாமலை நாடார், சு. பொ. வ. அமுதபாண்டிய நாடார், ப. உ. ஆ. தில்லையம்பல நாடார் ஆகியவர்கள் உதவிக் காரியதரிசிகளாகவும், ச. சு. பழனிச்சாமி நாடாரவர்கள் வாலண்டியர் ஜெனரல் கேப்டனாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர்.

### அறிக்கை நிர். 2.
### காரியக் கமிட்டியார்.

4—5—28-ல் நாடார்கள் ஹைஸ்கூலில் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடார்வர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம் கூடி காரியக் கமிட்டிக்கு 50 பேர்கள் வரையிலும் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களில் மகாநாடு சம்பந்தமான சகல காரியாதிகளிலும் பொறுப்பாளர்களாக ஸ்ரீமான்களான சேர்மன்—ப. உ. ஆ. சிதம்பர நாடார், ஜெனரல் ஸெக்ரெட்டெரி—சு. ஆ. முத்து நாடார், பொக்கிஷதார்—ச. வள்ளிநாயகநாடார், வைஸ் சேர்மன்—ப. க. உ. அய்யாச்சாமி நாடார், உதவிக் காரியதரிசி—மா. உ. மாயாண்டி நாடார் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர்.

### அறிக்கை நிர். 3.
### தந்தி விலாசம்.

4—5—28 கூட்டத்தில் உபசரணைக் கமிட்டி ஆபீஸுக்குத் தந்தி விலாசம் "சங்கம்" என வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானமாகி அவ்வண்ணமே ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறது.

### அறிக்கை நிர். 4.
### கௌரவ அக்கிராசனர் தேர்தல் கூட்டம்.

4—5—28-ல் நடந்த கூட்டத்தில் மற்றொரு தீர்மானமாக கௌரவ அக்கிராசனர் தேர்தல் கூட்டத்தை வைகாசி ௴ 1-௳ யில் (14—5—28) கூட்டுவிக்க வேண்டுமென்றும், கௌரவ அக்கிராசனர் தேர்தலுக்கு நாடார் மகாஜனங்கள் தம் தம் அபிப்பிராயங்களைத் தந்துதவ வேண்டுமென்றும் தீர்மானமாகியிருக்கிறதாகையால், நாடார் மகாஜனங்கள் அனைவரும் ஷை கூட்டத்திற்கு விஜயமாகியும், விஜயஞ்செய்யச் சௌகர்ய மில்லாதார் பத்திரிகைகள் மூல மன்றி உபசரணைக் கமிட்டியாருக்கு நேரே கடிதங்கள் மூலமாயும் தங்கள் தங்கள் மேலான அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### ஓர் மறுப்பு.

நாடார் 12-வது மகாநாட்டுக்கு உபசரணைக் கமிட்டிச் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கும் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடாரவர்கள் தமது உபசரணைக் கமிட்டிச் சேர்மன் பதவியை ராஜினாமாச் செய்து விட்டதாக "ஓர் நாடார் குலத் தொண்டர்" எனக் கைச் சாத்திட்டு, யாரோ ஒருவர் "சுதேச மித்திரன்", "திராவிடன்", "தமிழ் நா[illegible]

## காலஞ் சென்ற திருவாளர், திருமேனிநாதர் அவர்கள்.

### அனுதாபங்கள்.

கனம். திருமேனி நாதரவர்களின் அகால மரண மறிந்ததும் திடுக்கிட்டுப் போனேன். ஐயோ! நம் சமுகமும், தேசமும் ஓர் நல்ல ஊழியனை இழந்து விட்டன. அவரை யான் நேரில் கண்டு பேசியதில்லை. ஆனால் அன்னவரால் அடுத் தடுத்து வரையப்பட்ட வியாசங்களை மித்திரனில் படித்துப் படித் தின்புற்றிருக்கிறேன். அவரின் குணாதிசயங்களும், அரிய செயல்களும் அறிந்த யான் அவரை ஓர் பெரியார் என்று போற்றுகின்றேன். இவ்விதப் பெரியார்கள் திடீ ரென்று பொன்னுலகு போய்விடுதல் யாருக்குத் தான் சகிக்கும்? ஆனால் பகவான் அழைக்கும்போது மறுத்துச் சொல்வதார்? இறைவன் இஷ்டம் இப்படியாயிற்று போலும். அன்னவர் ஆன்மா சாந்தியடையவும், குடும்பத்தார்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் ஆறுதலளிக்கவும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

டி. ஜி. மணி நாடார்,
கொழும்பு.

ஃ ஃ

என் அருமைத் தோழரும், சேத குல அருந் தொண்டரும், உத்தமோத்தமரும், பல் வகையிலும் போற்றற் குரியவரும், "நாடார் குல மித்திரன்" மானேஜரா யிருந்தவருமான திருமேனிநாத நாடாரவர்கள் மரணத்தைக் கேள்வி யுற்ற அன்று எனக்கு சிறிது சேஷம் ஸ்மரணை யில்லை. 4 நாள் வரையிலும் இரவிற் கண் . துயிலும் போதும் அந் நினைவே கனவு. மத்தியில் விழித்தபோதும் அதே விசாரம். அன்று முத லிதுவரை அருப்புக்கோட்டையை நினைக்கும்போதும், "நாடார் குல மித்திரன்" தோன்றும் போதும், பேசும் போதும், நல்லார் சரித்திரம் சம்பாஷிக்கும் போதும், கான்பரன்வின் செய்தியைக் காணும் போதும், இடை யிடையே திகீர் திகீ ரென அவர் மரணமான விசாரமே என்னை உருக்குகின்றது. எல்லாரைப்போலும் தான் பிறந்தார்; வளர்ந்தார்; சாயுச்சிய மடைந்தார்; உலகில் எந்த ஜீவராசிகளும் நிலை யல்லவே என்று மனதை மாற்றி மாற்றி வந்தாலும், அன்னவரின் ஞாபகம் என்னை விட்டகலவே யில்லை. அந்தோ! திருநயனமுடைய திருமேனிநாதரே! நும் பிரிவு என் மனதில் தினந்தோறும் சதாவும் ஊடுருவி நையச் செய்கின்றது. நான் அறிந்த மட்டில் எனது உற்றார், உறவினர், உரிய சிநேகிதர்களில எத்தனை பேரோ மரணமானார்கள். அத்தனை பேர்களினுடைய மரண அனுதாபமும், சஞ்சலமும் என் சிந்தையை விட்டு சீக்கிரம் நீங்கின. ஆனால் உமது என் கண் காணாப் பிரிவு, எனது சிந்தையில் வேரூன்றிப் பதிந்து விசனத்தின் மேல் விசன முண்டாக்குகின்றது. நாதரே! உமது ஆன்மா நாதனடியிற் சாந்தி யடையும்படி பிரார்த்திக்கின்றேன்.

கே. ஏ. புன்னைமுத்தன்,
கல்லூருணி.

ஃ ஃ

திருவாளர். திருமேனிநாதர் அவர்களின் அகால மரணத்தைப் பத்திரிகை வாயிலாய் அறிந்து மனம் உருகுகின்றோம். இன்னாரின் நற்கீர்த்தியை மண்ணுலகமும், விண்ணுலகமும் புகழு மென்று திடமாய்ச் சொல்லுவோம். இப் புண்ணியரின் குடும்பத்தாருக்கு ஆண்டவன் ஆறுதலளிப்பாராக. இன்னாரின் ஆத்மா கடவுளிடம் சேர்வதாக.

அ. ஆ. சாமுவேல் நாடார்,
ஈப்போ.

---

விடுத்திருக்கும் சமாச்சாரம், விஷயம் சரியாய்த் தெரிந்து கொள்ளாமல் வெளியிட்டதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சு. ஆ. முத்து நாடன்,
ஜெனரல் ஸெக்ரெட்டேரி.

## வைரச் சுரங்கம்.

மனிதர்கள் நிலங்களை வாங்கியும், விற்றுக் கொண்டு மிருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மையை நோக்கின் நிலங்கள் தான் மனிதர்களை வாங்கிக் கொண்டும், விற்றுக் கொண்டு மிருக்கின்றன.

*　*

ஆகுங் காலம் வந்து விட்டால் எத்துணை எதிர்ப்பிருப்பினும் எக் காரியமும் சித்தியாகி விடும்.

*　*

பின்னால் நடக்கப் போகிற பெரிய காரியங்களுக்குத் தான் இறைவன் பெருத்த உள்ளத்தோடு ஒவ்வொருவரையும் கூட்டி வைக்கிறார்.

*　*

அபாயமும், யோகமும் நிழல்போல் மனிதனை அவனறியாமல் பின் தொடர்ந்தே வருகின்றன.

*　*

சிறுவர்களிடத்தில் நிதானத்தை விரோதித்துப் பேசுதல் கௌரவக் குறைவே யாகும்.

*　*

உடல் வலிமையைப் பத்து ரூபாய் வேலைக்கார னென்றால், மன வலிமையை நூறு ரூபாய் சம்பளகார னென்பது ஆச்சரியமாகாது.

*　*

விவகாரம் ஆகாரம் சுருங்கினால் குறையும். உணவு குறைய நோய்களும் அவற்றாலாம் கஷ்ட நஷ்டங்களும் குறையும்.

*　*

அநேகமாய் சகலத்திலும் மோசம் நுழைந்து விட்டதால் உண்மை யிடத்திலும் சீக்கிரம் நம்பிக்கை ஏற்பட மார்க்க மில்லை.

*　*

நம்பி வாழ்ந்தவரும் பலர்; தாழ்ந்தவரும் பலர். பூரண நம்பிக்கைக் கிருக்கும் சக்தி பீரங்கிக்குக் கூட வில்லை.

*　*

ஆளைப் பொறுத்து உண்மை பொய்யாகவும், பொய் மெய்யாகவும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

*　*

தப்பிதமாகப் பிறர் வைத்துக் கொண்டு கொடுக்க மறுக்கும் நமது காலிப் பையை நீதி ஸ்தலத்தின் மூலம் பெறுவதற்குப் பணப்பை செலவாகும்.

*　*

பதில் தெரிந்து செய்வது பரிகளிக்கும். அவசரம் அவமானத்தை அளிக்கும்.

*　*

மிக நுண்ணியதாகக் கவனித்து ஆராய்பவர்களை வேஷ மோசக்காரர்கள் ஏமாற்றித் தப்பிப்பதரிது.

*　*

பகைவர்களுக்கு நமது உரிமையை விட்டுக் கொடுப்பது யானை தன் தலைமேல் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதற் கொக்கும்.

*　*

தீய விஷயங்களில் நுழையாதிருப்பது கஷ்டமானதல்ல. ஆனால் நுழைந்து விட்டுப் பின்பு அவற்றை விட்டு விடுவது இலகுவானதல்ல.

அ. கு. அண்ணாமலை.

## ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்
### தூத்துக்குடி.

திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடியில்எட்டையாபுரம்ரோடுபழய ஊத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும், ஸ்ரீ பாலகிருஷ்ணமூர்த்திக்கும் நாளிது சித்திரை௴ 20௳ யில் வருஷாபிஷேகம் ஸ்ரீ கந்தப்ப ஓதுவா ரவர்களால் வேதானுசாரப்படி வெகு விமரிசையாய் நிறைவெய்தியது. அன்றிவு ஷை மூர்த்திகளுக்கு விசேட அலங்கார தூப தீப நிவேதன ஆராதனையும் நடந்தது. பக்த குழாங்கள் வந்து தெரிசனைத்தப்பேற்றையடைந்து திருவருட் பிரசாதம் பெற்று இன்புற்றேகினர் என்று காரியதரிசி ஸ்ரீமான் சொ. சி. பச்சையநாடார் எழுதுகிறார்.

## க்ஷத்திரிய பால்ய நாடார் ஐக்கிய சங்கம்,
### தளவாய்புரம்.

13—4—28 மாலை எட்டு மணிக்கு எலிமெண்டரி ஸ்கூலில் இச்சங்கத்தின் முதல் கூட்டம் ஸ்ரீமான் தா. குருசாமி நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடை பெற்றது. ஆரம்பத்தில் ஸ்ரீமான் சி. சோமசுந்தர நாடாரவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடி முடிக்க, கனம். அக்கிராசனாதிபதியவர்கள் தம் முகவுரையில் இவ்விடத்தில் இதுவரையில் இம்மாதிரிக் கூட்டம் கூட வில்லை யென்றும், இப்பொழுது இச் சங்கம் கூடியதற்காகத் தாம் மிகவும் மெச்சுவதாகவும், இச் சங்கம் மிகவும் நமக்கு நன்மையைக் கொடுக்கு மென்றும், ஒற்றுமைக்கு இது ஒரு முக்கிய சாதனமாகும் என்றும் கூறி முடித்தார்கள்.

பின்னர் இச் சங்கத்தை ஒழுங்காய் நடத்தும் பொருட்டு அங்கத்தினர்களெல்லாம் முழு மனதுடன் ஸ்ரீமான்களான பு. மூ. மா. பழனியப்ப நாடாரவர்களைக் காரியதரிசியாகவும், தா. சங்கரலிங்க நாடாரவர்களை உப காரியதரிசியாகவும், இ. முத்திருளப்ப நாடாரவர்களைப் பொக்கிஷதாரராகவும், மா. முத்துமாயாண்டி நாடாரவர்களை உப பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுத்தார்கள். அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்ததை அக்கிராசனாதிபதி அவர்கள் அங்கீகரித்தார்கள்.

அப்பால் ஸ்ரீமான் பிலிப்ஸ் நாடாரவர்கள் இச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகிய கல்வி அபிவிருத்தியைப் பற்றியும், ஒற்றுமை முதலான விஷயங்களைப் பற்றியும் தெளிவாய் உபந்நியாசஞ் செய்தார்கள். அடுத்த கூட்டத்தில் 'கல்வி' யைப் பற்றி உபந்நியாசஞ் செய்ய ஸ்ரீமான் மு. சுப்பையா நாடாரவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கடைசியில் தாம்பூலம், சந்தனம் முதலியவைகள் வழங்கப்பட்டன. கனம். அக்கிராசனாதிபதி யவர்களுக்கு எல்லோரும் தங்களுடைய நன்றியறிதலைக் காட்டிக் கரகோஷஞ் செய்து தத்தம் இல்ல மேகினர் என்று காரியதரிசி ஸ்ரீமான் பு. மூ. மா. பழனியப்ப நாடார் எழுதுகிறார்.

---

## பிரகாசபுரத்தில் கக்ஷிப் பிரதிகக்ஷி.

பிரகாசபுரம் சத்தியவேத கிறிஸ்தவர்களுக்குள், ஒரு கட்சிக்காரர் ஆலய வரவுசெலவுகணக்குகளைக் கனம். பங்கு, அடைக்கலநாத சுவாமி அவர்களிடம் கொடுத்துவிட வேண்டும் என்றும், பிறிதொரு கட்சிக்காரர் ஷை ஆலய வரவு செலவு கணக்குகளை அன்னவரிடம் கொடுக்கக்கூடாது என்றும் பலமான கட்சிவிவாதங்கள் நடந்துவருகின்றன. இதற்கு முன் சால வருடங்களாக ஆலயத்திருநாள் அவர்களின் சமாதானக்குறைவினால் நிறுத்தப்பட்டு, அதிஷ்டவசமாய் சென்றவருடம் வெகு சிறப்பாய் நடந்தேறினது. இவ்வருடம் ஷை திருநாள் இவ்விதக் கக்ஷி விவாதங்களுக்கிடையே எவ்விதம்நடந்தேறுமோ என்ற சந்தேகத்திற்கு இடமாயிருக்கின்றது. தெய்வ காரியம் தடைப்பட்டுப்போக ஷையூர் கிறிஸ்தவ பெருமக்கள்கக்ஷிப்பிரதிகக்ஷிகொண்டிருப்பது எவ்வளவும் உசிதமல்ல. ஆகையால் அவர்கள் ஒருவித மனாசிக்கு வந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து தேவப்பணியாற்றுவார்களாக என்று பாணந்துறை ஸ்ரீமான் மா. ஞா. தாவீதுநாடார் எழுதுகிறார்.

---

## மரண மானார்.

பிரபல சங்கீத வித்வ சிகாமணியும் விருதுநகர் ஸ்ரீ கோபால கிருஷ்ண பஜனாலய மடம் தலைமைக் கர்த்தாவும் முக்கிய பஞ்சு வியாபாரியுமான மகா-ா—ா—ஸ்ரீ நி. சு. அ. கோபாலகிருஷ்ண நாடார் அவர்கள் சென்ற வாரம் அகால மரணமானார். இவரின் பிரிவாற்றாமையால் வருந்தும் மகாஜனங்களுக்கும், பந்துக்களுக்கும், குடும்பத்தாருக்கும் ஆறுதல் அளிக்குமாறும், இவர் ஆன்மா சாந்தி யடையுமாறும் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன் என ஒரு திரு[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி அருவுருவத் தன்மை நாம
மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்ரு வெளியைமனதவிழ நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்
விபவ ஞு சித்திரை மீ உ௰௫ உ

## நமது 12-வது மகாநாடு.

1

நமது நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு அருப்புக்கோட்டையில் நடத்தவேண்டு மென்று அழைத்தபடி காலங் கடத்தாமல் மகாநாடு நடைபெறவேண்டிய காலமாகிய ஜூலை மாசத்தில் நடத்துவதென்று உபசாரணைக் கமிட்டி நியமனமாகி வேலை ஆரம்பிக்கப்பெற்றிருக்கும் முழுவிபரங்களும் மற்றோரிடத்திற் பிரசுரித்திருக்கின்றோம். இம்மகாநாடு செவ்வனே நடைபெறுவதற்கு அருப்புக்கோட்டை கனம் தங்கிய உறவின் முறை நாடார்கள் சகல ஒத்தாசைகளும் செய்வதாகவொப்புக்கொண்டுபொது நிலங்களை மகாநாட்டுக்குவேண்டியவரையும் உபயோகித்துக்கொள்ளும்படி உத்தரவிட்டிருக்கின்றார்கள். வாலிப நண்பர்கள் பலர் உற்சாகமாய் வேலை செய்ய முன் வந்திருக்கின்றார்கள். மதுரை, தூத்துக்குடி முதலிய வெளியூர்களில் வசிக்கும் அருப்புக்கோட்டை நாடார் கனவான்களும், வாலிபர்களும்ஜெனனவூர் திருமகாநாட்டுக்குத் திறமையான வேலை செய்ய மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். பொதுவாக ஜனங்களனைவரும்மகாநாடுநடத்துவதில் மிகுந்த பரபரப்புக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். மதிப்பு வாய்ந்த மாபெருந்தலைவரொருவரை மகாநாட்டுக்குக் கௌரவ அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில் மிகுந்த கவனமுடையவர்களா யிருக்கின்றார்கள். அது விஷயமாக வைகாசிமீ 1உ (14—5—28-ல்) கூடப்போகும் ஒரு விசேஷக் கூட்டத்திற்கு நாடார் மகாஜன சங்கம் கௌன்ஸில் மெம்பர்களனைவரையும் மற்றும் பல முக்கியஸ்தர்களையும் வந்து சேரும்படி அழைத்திருக்கின்றார்கள். ஆகையால் மகாநாடு இம்முறை வெகு சிறப்புடன் நடைபெறு மென்று நம்புகின்றோம்.

நாடார் குல மக்கள் யாவரும் இம்மகாநாடு நன்கு நடைபெற [illegible] தாசைகளும் செய்வார்களென்றே நம்புகின்றோம். இவ்வருப்புக்கோட்டையில் எவ்வளவு பெரிய முக்கியமான பொதுக் காரியங்கள் நடந்த காலத்திலும், விருதுநகர் கனம் தங்கிய நாடார் சமுகத்தவர்கள் அதிகமாய் வந்திருந்து மிகுந்த ஒத்தாசை செய்து வந்திருக்கின்றார்கள். சுமார் இருபது வருடங்களுக்கு முன் இவ்வூர் அமுதலிங்கேஸ்வரர் ஆலயக்கும்பாபிஷேகத்தின் போது ஊர் தாங்க முடியாத ஜனக்கூட்டமும், மிகுந்த ஆரவாரமும் உண்டான போது எப்படி இதில் திருப்திகரமாய்ச் சமாளித்துக் கொள்வதென்று திகைபுற்றிருக்குங்கால் அவர்கள் (விருதுநகர் நாடார்கள்) பொறுப்பேற்று திறமையாகவும், திருப்திகரமாகவும் நடத்தி வைத்த நன்றி என்றும் மறக்கத்தக்கதன்று. ஆகையால் இம்மகாநாடு செவ்வனே நடைபெறுவதற்கு நாடார் குல மக்கள் அனைவோருடைய பேருதவியையும் பெரிதும் வேண்டுவதுடன், விருதுநகர் நாடார்கள் பேருதவியை விசேஷமாக உபசாரணைக் கமிட்டியார் எதிர்பார்க்கக் கூடு மென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகையால் விருதுநகர் நாடார் பொதுஜனாபிமானிகளையும் மற்றும் பல நாடார் குலபிமானிகளனைவரையும் மகாநாடுநன்குநடைபெற வேலையிற்பங்கெடுத்துக் கொள்ளக் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஏற்கனவே நமக்கு வாக்களித்த நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகளும், மாஜிக் காரியதரிசிகளும் மகாநாட்டுக்கு மனப்பூரணமான ஒத்தாசை செய்யும்படி கோருகின்றோம்.

---

## திரு. கண்ணப்பர் வெற்றி.

---

"திராவிடன்" ஆசிரியர் திரு. கண்ணப்பரை திருவண்ணாமலை திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்யவிடாமல் தடுத்துக் கோயிற் கதவை அடைத்துக்கொண்ட இரண்டு குருக்கள் மீது தொடுத்திருந்த வழக்கு, திரு. கண்ணப்பருக்கு அநுகூலமாகி இரு குருக்களும் தலைக்கு நூறு ரூபாய் வீதம் அபராதம் விதிப்பாகி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வழக்கு சுமார் ஒரு வருஷமாக நடந்துவந்தது. வழக்கின் முடிவை தமிழ் நாட்டார் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஏனென்றால், தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களெல்லாம் புராதன சேர சோழ பாண்டிய மன்னர், குறு நில மன்னர், தற்கால ஜமீன்தார், மிராசுதார் முதலிய பிராமணரல்லாத பக்தர்களால் கட்டப்பட்டனவையேயன்றி பிராமணர்களுக்குக் கோயிலில் எவ்விதப் பாத்தியமும் கிடையாது. அங்ஙனமிருக்க, 'கோயிற் பூனை தேவர்க் கஞ்சா' தென்பது போல் பிராமணர்கள் ஆண்டவனுக்குங்கூடப் பயப்படாமல் கோயில்களில் பற்பல அக்கிரமங்களைச் செய்து வருவதுடன் கோயிலை அவர்களப்பன் வீட்டுச் சொத்தைப்போலெண்ணிக்கொண்டு கோயிற் கட்டியவர்களையே கோயிலுக்குள் விடாமற்றடுக்கவும், அவர்கள் மீது வியாச்சியம் தொடரவும், ஒருவருக்கொருவர் கோள் மூட்டி கோடரிக் காம்புகளாக்கவுமான அக்கிரமங்களோ சொல்ல முடியாது. இவ்வக்கிரமங்கள் ஏனைய நாட்டைப் பார்க்கிலும் தமிழ் நாட்டிலே [illegible]

சொல்ல வேண்டியதில்லை. ஒரு அந்நிய வெள்ளைக்காரன் கோயிலுக்கு வந்தால் தம் வீட்டுக்குப் புதிதாய் வரும் மருமகப்பிள்ளைக்கு வாயலில் நின்று மாலை சாற்றி மரியாதை செய்து அழைத்துச் செல்வதுபோல் மாலை சாற்றி பூரண கும்பம் வைத்து உள்ளே அழைத்துக்கொண்டு போய் எல்லாவற்றையும் காட்டுவதுடன் ரகசிய அறைகளையுங்கூடத் திறந்து காட்டுவார்கள். கோயிலைச் சுற்றியுள்ள ஒரு பிராமணரல்லாத பக்தனுக்குச் சுவாமியைப் பார்ப்பதற்குங்கூட உரிமை கிடையாது என்று சொல்வார்கள். இவ்வநியாயத்தை அடியோடு தொலைப்பதற்குப் பிராமணரல்லாத பிரபுக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் இன்னும் சரியான மனம்வரவில்லை. இத் தடுமாற்ற முள்ள காலத்தில் மிகவும் தைரியமுடன் இவ்வழக்குத் தொடுத்த திரு. கண்ணப்பருக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றோம்.

வழக்கில் ஆதிமுதல் அந்தம் வரையும் சலிப்பின்றி தமது கடமையைச் செலுத்தி முடிவில் வெற்றி பெற்றதை நினைத்து மிகவும் பாராட்டுகின்றோம். திரு. கண்ணப்பரைப் போன்று எல்லாத் தேசாபிமானிகளும் அநீத மதம், ஆபாச சாஸ்திரம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தி மக்களை மயக்கும் மாயவலைகளை அறுத்தெறிந்து அன்பாலயத்தில் அறக்கடவுளைத் துதிக்கும் ஆற்றலைக் கொள்ள ஏதுகரமாக முன் வருவார்களா?

## வாலிப நாடார் 3-வது மகாநாடு,

### அருப்புக்கோட்டை.

அருப்புக்கோட்டை வாலிப நாடார்களின் பொதுக் கூட்ட மொன்று 6—5—28 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு 12-வது மகாநாட்டு வாலண்டியர் ஜெனரல் கேப்டன் திருவாளர். ச. சு. பழனிச்சாமி நாடார் அவர்கள் தலைமையின் கீழ் மு. மு. மு. வாசக சாலையில் கூடியது. அவ்வமயம் மதுரை, கும்பகோணம் ஆகிய விடங்களில் நடந்தேறியதே போல் நம் ஊரில் கூட விருக்கும் 12-வது மகாநாட்டின் போது வாலிப நாடார் 3-வது மகாநாட்டை அதி சிறப்பாய் நடத்தி வைக்க வேண்டு மென்றும், கீழ்க்கண்டவாறு மகாநாட்டுக்கு உபசாரணைக் கமிட்டி உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்ப தென்றும், உபசாரணைக் கமிட்டி அங்கத்தினர்கள் ஒரு ரூபாய் கட்டணம் கட்ட வேண்டு மென்றும், கௌரவ அக்கிராசனரையும், மகாநாடு கூடும் தேதியையும் தேர்ந்து குறிப்பிட்டு அழைப்பு நோட்டீஸ்கள் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டு மென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

தூத்துக்குடி, விருதுநகர், மதுரை பிரபல வியாபாரியும், பேங்கருமான ஸ்ரீமான் மா. வே. மாய நாடார் அவர்களின் திருக் குமாரரும், அருப்புக்கோட்டை வாசியும், வாலிப சிரேஷ்டருமான திருவாளர் மா. மாணிக்கவேலு நாடார் அவர்கள் உபசாரணைக் கமிட்டி சேர்மனாகவும், திருவாளர். சிவ. பெ. பழனிச்சாமி நாடார் அவர்கள் வைஸ் சேர்மனாகவும், திருவாளர்களான, அ. கு. அண்ணாமலை நாடார், செ. இராமசாமி நாடார் ஆகியவர்கள் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர்.

மகாநாடு கூடும் தேதியும், கௌரவ அக்கிராசனர் நியமனமும் பின்னர் அறிவிக்கப்படும். ஆங்காங்குள்ள வாலிப நாடார்கள் இது விஷயத்தில் சிரத்தை யெடுத்து அதிகமான பேர்கள் விஜயஞ் செய்வார்களென எதிர்பார்க்கிறோம் என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## நாடார் 12-வது மகாநாடு.

நாடார் மகாஜன சங்கம், 12-வது மகாநாட்டை அருப்புக்கோட்டையில் நடத்துவதாக கும்பகோணத்தில் அழைத்ததற்கிணங்க, கனம் தங்கிய உறவின் முறையார் ஒத்தாசையாலும், மகாஜனங்களின் ஊக்கத்தாலும் உபசாரணைக் கமிட்டி நியமனமாகி மகாநாட்டின் வேலைகள் தீவிரமாய் நடந்து வருகின்றன. நாடார் மகாஜனங்கள் சமுக சீர் திருத்த விஷயங்களில் மாத்திரம் இதுவரை வேலை செய்து வந்திருந்தாலும், மத சீர்திருத்த விஷயங்களில் தங்களுக்குள்ளாயினும் ஒரு வித ஒற்றுமையான தீர்மானங்களைச் செய்துகொள்ள வேண்டியது முக்கியமாய் ஹிந்து நாடார்களுக்கு அவசியமாயிருக்கிறது.

தவிரவும், வரப்போகிற ராயல் கமிஷன் முன்னிலையில் நமக்கு வேண்டிய காரியங்களைக் குறித்து சாட்சியங்கொடுக்க வேண்டிய விஷயங்களும் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது.

முக்கியமாய் ஏழை மாணவர் சகாயநிதியைப்பற்றி மதுரையில் கூடிய ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கில் தீர்மானித்தபடி இதுவரை காரியம் ஒன்றும் நடைபெறாதிருப்பதாலும், அது விஷயமாய் பொது ஜனங்களுக்குள் இரண்டு வித அபிப்பிராயங்களிருப்பதாலும் ஷை தீர்மானத்தைப்பற்றி மறுபடியும் ஆலோசனை செய்து தீர்மானிக்கவும் வேண்டியதிருக்கிறது.

ஆகையால் மகாநாடு நன்றாய் நடைபெறுமாறு வேண்டிய சகாயங்களை நாடார் மகாஜனங்கள் செய்வார்களென்னும் நம்பிக்கை வரவேற்புக் கமிட்டியாருக்குண்டாயினும், நடக்கப்போகிற மகாநாடானது அனேக முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி நடத்திவைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் கூடுவதாயிருப்பதால் ஒவ்வொருவூரிலுமுள்ள முக்கியஸ்தர்களும் வாலிபர்களும் திரளாக விஜயஞ்செய்து ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

முதல் நாள் தலைமைவகிக்க வேண்டிய கௌரவ அக்கிராசனர் தெரிந்தெடுப்பதற்காக அடுத்த வைகாசி மீ 1 உ (14-5-28) திங்கள்கிழமை யன்று மீட்டிங் நடத்துவதாய்த் தீர்மானித்து அழைப்புக் கடிதங்கள் பலருக்கும் அனுப்பிவருகிறார்கள். எல்லாத் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பவேண்டியதே உபசாரணைக் கமிட்டியாரின் உத்தேசமாயினும் ஞாபகமின்றியும், சரியான விலாசம் தெரியாமலும் அழைப்புக்கடிதம் அனுப்ப விடுபட்டிருப்பின் அதைப் பொருட்படுத்தாது தாங்கள் விஜயஞ் செய்து தங்களின் மேலான அபிப்பிராயத்தைத் தெரிவித்து ஒத்தாசை செய்யும்படி உபசாரணைக் கமிட்டியின் சார்பாக ஒவ்வொரு தலைவரையும் கேட்டுக் கொள்கிறோம். நேரில் விஜயஞ் செய்ய முடியாத சந்தர்ப்ப முள்ளவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை உபசாரணைக் கமிட்டி ஆபீஸுக்குக் கடிதமூலம் தெரியப்படுத்தினால் மிகுந்த ஒத்தாசையாயிருக்கும்.

ஓர் உபசாரணைக் கமிட்டி மெம்பர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அரிய வுரைகள்.

நான் பெரும்பாலும் தோல் பாதரக்ஷைகள் அணிவதில்லை. ஏனெனில், இயற்கையான மரண மடைந்த மாட்டின் தோலினல் அவை ஆனவை என்ற நிச்சயமில்லை. என்னுடைய சுகத்திற்காக ஓர் அழகிய மிருகம் கொல்லப்பட்டு அதன் தோல் மேல் நான் நடக்கிறேன் என்னும் எண்ணம் என்னல் பொறுக்கமுடியாது. உயிர்களெல்லாம் தூய்மையானவை என்பது கீழ் நாட்டின் கொள்கை. ஏசுநாதர் இதை உபதேசியானிடினும் இந்தக் கொள்கையில் அவர் நம்பிக்கை கொண்டவர் என்று எனக்கு நிச்சயம் உண்டு.

—மகாத்மா காந்தி.

நாம் உடுத்திக் கொள்வதற்கு அந்நியத் துணி இறக்குமதி செய்தல், நம்மை ஆள்வதற்கு அந்நியரை இறக்குமதி செய்வது போலாம்.

—ஸ்ரீசக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

சமூக வாழ்க்கையில் ஒன்றையொன்று வெறுப்பனவும், ஒன்றையொன்று நெருங்கவும் கூடாதென்று நினைப்பனவுமான தனித்தனி வகுப்புகளாகப் பிரிந்துள்ள ஒரு தேசத்தார் அரசியல் துறையில் ஒற்றுமைப் படுதல் இயலாத காரியம்.

—ஸ்ரீலாலாலஜபதிராய்.

பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபாகம் கொடுப்பதென்று ஏற்பட்டால் வரதக்ஷிணை என்னும் கொடியவழக்கமும், அதனல் விளையும் பல விபத்துக்களும் இல்லாமற் போகும். விதவைகள் இதுகாலை உள்ளாக வேண்டியிருக்கும் குடும்பக் கொடுமைகளும் ஒழியும்.

—ஸ்ரீ ஜம்னுதாஸ் மேதா.

## நல்ல கூலி.

போர்டு மோட்டார்களின் சொந்தக்காரராகிய ஹென்றி போர்டு அவர்கள் முதன் முதலாய் இப்பொழுது இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார். "டெய்லி நியூஸ்" பிரதிநிதியொருவர் அவரைக் கண்டு கேட்ட போது முதலாளிகள் தொழிலாளர்கட்கு வயிறு நிரம்பும்படி நல்ல கூலிகள் கொடுக்க வேண்டும் என்றும், அப்படிக் கொடுத்தாற்றான் வியாபாரம் செழிக்கும் என்றும், இங்கிலாந்தில் மிகக் குறைவாய்க் கூலிகள் கொடுப்பதிலுலேயே வேலையில்லாத் திண்டாட்டம் பரவிக் கிடக்கின்றதென்றும் கூறினர். திரு. ஹென்றி போர்டு பெரும் வியாபாரி. உலகத்திலுள்ள பெரும் பணக்காரரில் ஒருவர். அவரின் கீழ் கோடிக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். ஆகையினற்றான் வியாபாரம் செழிக்கும் முறையை அறிந்து, தொழிலாளர்கட்கு நல்ல கூலி கொடுக்க வேண்டுமென்கிறார். இதைத் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தும் இந்திய முதலாளிகள் ஆழ்ந்து நோக்குவார்களாக. வேலை செய்யும் தொழிலாளர்கள் வயிற்றில் சிக்கனம் என்ற பெயரால் மண் அள்ளிப் போட்டுப் பார்க்கும் இந்திய முதலாளிகள் இதைக் கவனிப்பார்களா ?

கவனித்தால் பம்பாயிலும், வங்காள ரெயில்வேயிலும் வேலை நிறுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்குமா ? 202-சர்க்குலர் ஒன்று பிறப்பித்து அநேக தொழிலாளர்களைப் பட்டினி போடச் சூழ்ச்சி செய்து வரும் தென்னிந்திய ரெயில்வே ஏஜண்டு அவர்கள் ஹென்றி போர்டு அவர்கள் பேச்சை [illegible]

"திராவிடன்".

## கல்லூருணி,
## சைவபானு க்ஷத்திரிய எலிமெண்ட்டரி ஸ்கூல்,

### வருஷக் கொண்டாட்டம்.

கல்லூருணி, சைவபானு க்ஷத்திரிய எலிமெண்ட்டரி ஸ்கூலின் வருஷக் கொண்டாட்டம் 20—4—28-ல் ஷை ஸ்கூலுக்குப் பக்கத்தில் இதற்கென அமைக்கப் பெற்ற சிங்காரக் கொட்டகையில் ராமநாதபுரம் ஜில்லா கல்வி இலாகாத் தலைவர் ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ. பி. எல். அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் அதி விமரிசையாய் நடைபெற்றது.

கொண்டாட்ட ஆரம்பத்தில் கனம். அக்கிராசனதிபதியவர்களை நகர மகாஜனங்களும், பள்ளி மாணவர்களும் வெகு குதூகலத்துடன் சென்று சந்தன களப கஸ்தூரி அலங்காரம் செய்து புஷ்ப ஹாரஞ் சூட்டி கொட்டகைக்குச் சோலாகலமாய் அழைத்து வந்தனர். கனம். அக்கிராசனர் அவர்கள் கொட்டகைக்குள் நுழையவும் ஜனங்கள் கழி பெருவகை கொண்டு செய்த கரகோஷம் செவிடுபட முழங்கியது.

முதன் முதலாக ஸ்ரீமான் பொ. அருணசல உபாத்தியாயரவர்கள் கடவுள் வணக்கம் பாடி, கனம். அக்கிராசனதிபதியவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். பின்னர் கனம். அக்கிராசனதிபதியவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து, தம் முகவுரையில் 'கல்வியபிவிருத்தி' யைப் பற்றி விளக்கமாகவும், வெகு உருக்கமாகவும் பேசி முடித்தார்கள். பின்பு அருப்புக்கோட்டை, ஸ்ரீமான் ச. சு. பழனிச்சாமி நாடார் அவர்கள் நாடார் சமூக ஒற்றுமையையும், கல்லூருணி நாடார்களின் தற்கால நிலைமையையும் பற்றி நன் கெடுத்தோதினர். அதன் மேல் ஷை ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் கே. அருணப்ப நாடாரவர்களால் ஷை ஸ்கூலின் வருஷாந்திர ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்பால் பள்ளி மாணவர்களுக்குச் சந்தனம், புஷ்பம், சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்டு, அவர்கள் திறமைக்கேற்றவாறு பரிசுகளளிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனர் முடிவுரை கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

மறு நாள் இரவு 8 மணி முதல் 2 மணி வரையும் பள்ளி மாணவர்களால் அதர்மத்தைத் தர்மம் ஜெயிக்குமென்ற கருத்துக் கொண்ட 'தர்ம சீலன்' சரித்திரம் நாடக ரூபமாய் நேர்த்தியாய் நடத்திக் காண்பிக்கப்பட்டது.

ச. தி. பொன்னம்பல நாடார்.

## நன் கொடை.

நம் மித்திராபிமானியும், நம் குல முன்னேற்றத்தில் அதிக ஆர்வமுள்ளவரும், திரைகடலோடி ஈப்போவில் வியாபாரஞ் செய்து வருபவருமான கோவைக்குளம் ஸ்ரீமான் அ. ஆ. சாமுவேல் நாடாரவர்கள் அன்பு கூர்ந் தனுப்பி வைத்த நன் கொடை ரூபாய் 1—0—0 சந்தோஷமாய்ப் பெற்றுக் கொண்டு அன்னவருக்கு எமது வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

## திருத்தம்.

சென்ற வாரமித்திரனின் 5-ம் பக்கத்தில் உள்ளூர்ச் செய்திகளுள் "ஸ்ரீலஸ்ரீ. பி. தியாகராஜசெட்டியாரவர்களின் 3-ம் வருஷ[illegible] கொண்டாட்டம்" எனும் தலைப்பின் [illegible] செட்டியாரவர்களும் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவேண்டுகிறோம்.

## செய்தித்திரட்டு.

அமெரிக்காவில் மோட்டார் வியாபாரியும், கோடீசுவரருமான ஸ்ரீ. ஹென்றி போர்டு தமது மோட்டார் தொழிற் சாலையில் 100 இந்திய மாணுக்கர்களுக்குப் பயிற்சி பெற இட மளித்து அவர்களுக்கு மற்றத் தொழிலாளர்களுக்குப் போல் தினசரி சம்பளமும் கொடுக்கிறார்.

* *

வட திருவாங்கூரில் அனைக்கரை யெனும் ஊரில் 140 வயதுள்ள கணவனும் 110 வயதுள்ள மனைவியுமான தம்பதிகள் இருக்கிறார்கள். கணவன் 1809-ம் ௵ முதல் 1819-ம் ௵ வரை திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக விருந்த கர்னல் மன்றோவை இன்னும் ஞாபகத்தில் வைத்திருக்கிறார். அவர் 1810-ம் ௵த்தில் மலையான எல்லையை நிர்ணயிக்கக் காடுகளை வெட்டும் போது தானும் கூலியாக வேலை செய்ததாகவும், பின் கர்னல் மன்றோவிடம் வேலைபார்த்து வந்ததாகவும் கூறுகிறார். தனது 50-வது வயதில் மணம் செய்துகொண்டு 80 வயதுவரை இந்துவாயிருந்து பின் கிறிஸ்து மதத்தைத் தழுவியிருக்கிறார். இந்துப் பெயர் செல்லாண்டி; கிறிஸ்தவப் பெயர் ஏசநாதன். இத் தம்பதிகளுக்கு 4 குழந்தைகளிருக்கின்றனர்.

* *

நாகர்கோவில்—வடசேரியில் மாமிச வியாபாரம் செய்யும் இரு சகலப்பாடிகள் ஸ்லாட்டர் ஹௌஸ் (ஆடுமாடுகள் கொல்லுமிடம்) வில் தங்கள் ஆடுகளைக் கொல்லப்போயிருந்த சமயத்தில் அவர்களிலொருவர் எடுத்து வைத்திருந்த தண்ணீரை இன்னொருவர் உபயோகித்துவிட்ட காரணத்தால் தண்ணீர் எடுத்து வைத்தவர் அதை உபயோகித்தவரை யடிக்க உபயோகித்தவர் அவரைக் கத்திகொண்டு குத்துமேல் குத்தாய்க் குத்தி வீழ்த்திவிட்டார். குத்தும் போது தடுக்கவந்த குத்துப்பட்டார் மைத்துனருக்குத் தோளிலும் மணிக்கட்டிலும் வெட்டுகள் விழுந்தன. குத்துப்பட்டார் ஆஸ்பத்திரிக்கெடுத்துச் செல்லப்பட்டு வாக்குமூலம் கொடுத்ததும் இறந்துபோனார். தடுக்க வந்த மைத்துனர் கையை எடுக்க வேண்டியிருக்கிறதென டாக்டர் கூறுகிறாராம். குத்தினவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

* *

பாலக்காட்டில் வக்கீல் ஸ்ரீ பி. ராகவ மேனனின் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடி அம்மை குத்துவதற்கு எதிர்ப்பிரசாரம் செய்வதற்கு ஓர் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும், வைசூரியைப் போக்க அம்மை குத்த வேண்டுமென்பதை ரத்து செய்வதற்கான முறைகளைக் கண்டு பிடிக்கவும், அம்மைகுத்த வேண்டுமென்றிருக்கிற முனிஸிபல் சட்டத்தை ரத்துசெய்யவும் தீர்மானங்களாகியிருக்கின்றன. இது பற்றி ஸ்ரீ கே. வி. சுப்பிரமணிய ஐயரைக் காரியதரிசியாகக் கொண்டு ஒரு காரியக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

* *

பம்பாயில் மார்க்ஸ் அன்டுகம்பெனி கட்டடத்தில் பூட்டியிருந்த அறையில் பூட்டுப் பூட்டியே யிருக்க லக்ஷரூபாய்க்கதிகம் பெறுமான நகைகள் திருடு போயிருக்கின்றன.

* *

மத்தியஸ்காத்லந்துரயில்வே அதிகாரிகள் லண்டனிலிருந்து கிளாஸ்கோவிற்கும், அங்கிருந்து எடின் பார்க்கிற்குமாக 400 மைல்கள் தூரத்திற்கு ஓரிடத்திலும் தங்காமல் ஒரே யடியாய் ஒரு பிரயாணி வண்டியை ஓட்டிப் பார்த்து வெற்றியடைந்திருக்கின்றனர். இம்மாதிரிப் பரீக்ஷை உலகத்தில் இது தான் முதற்றடவை.

* *

அலகாபாத்தில் ஒரு பிராமணர் தீண்டாதாருக்காகப் பரிவு காட்டிவந்து தன்னிடத்தும் ஒரு தீண்டாதவரை வேலைக்கமர்த்திக் கொண்டகாரணத்தால் சில பிராமணப்பாவிகள் அவர் பேரில் வழக்குத் தொடுத்தப் பின் [illegible] தீர்ப்படைந்தார்கள்.

* *

இந்திய [illegible]

காகப் போட்டிப் பரீக்ஷை ஆகஸ்ட் ௴ 20 ௳ டில்லியில் நடக்கும்.

* *

கல்கத்தாவில் கோபால்தாஸ் என்ற ஒரு ஸ்திரீ ஒன்பது 100 ரூபாய் கள்ள நோட்டுகள் வைத்திருந்ததாய் ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

* *

சென்னையைச் சேர்ந்த மூவர் சந்நியாசி வேடம் தரித்துக்கொண்டு கல்கத்தாவில் ஏமாந்தவர்களிடம் பணத்தையும் நகைகளையும் திருடியதற்காக அவர்களைக் கல்கத்தா போலீஸார் கைது செய்திருக்கின்றனர். கைது செய்யும்போது அத்திருடர்களிடம் ரூ 700 பெறுமான நகைகளிருந்தனவாம்.

* *

பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ஸ்ரீ சர்ச்சில் தமது தேக அசௌக்கியத்தை முன்னிட்டு ஓய்வெடுத்திருக்கிறார்.

* *

சர்வகக்ஷி மகாநாடு பம்பாயில் நாளது மே ௴ 19 ௳ கூடப் போகின்றது.

* *

காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் நாளது மே ௴ 16 ௳ கூடப்போகின்றது.

* *

ஆங்கிலக்கவி லார்டு டெனிஸன் எழுதிய செய்யுள்களில் 16 வரிகளடங்கிய "கிராஸிங்திபார்" எனும் செய்யுளை அனுமதியின்றி அலகாபாத் 'ரஜூ–கேஷனல் புக்டிப்போ' கம்பெனியார் வெளியிட்டிருக்கும் புஸ்தகத்தில் சேர்த்திருப்பதாக அவர் குமாரர் ஹாலன்பாரென்டெனிஸன் [illegible] வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

* *

மோட்டார் விபத்தை யொழிப்பதற்கு ஜெர்மனியில் ஸ்ரீ ஹெர்வலின் என்பவர் ஒரு சாதன வழிகண்டு பிடித்திருக்கின்றனர். அவர் கண்டுபிடித்திருக்கும் யந்திரம் ரப்பர் குழாய் வைத்த மெத்தைபோலிருக்கிறது. அதை மோட்டாரின் முன் புறத்திலோ அல்லது பின்புறத்திலோ வைத்துவிட்டால் விபத்தைத் தடுத்துவிடுகிறது. ஒரு மோட்டாரை இவ்வியந்திரம் வைத்து 20 மைல் வேகத்தில் ஒரு மனிதன் பேரிலும், 28 மைல் வேகத்தில் ஒரு மரத்தின் பேரிலும், மற்றொரு மோட்டாரில் இவ்வியந்திரம் இன்னொன்றை வைத்து 18 மைல் வேகத்தில் இருமோட்டார்களையும் பரீக்ஷார்த்தமாக மோதவிட்டுப் பார்த்ததில் யாதொரு விதவிபத்தும் ஏற்படவில்லையென்று தெரியவருகிறது.

* *

திருவனந்தபுரத்தருகில் உள்ள ஓர் மைதானத்தில் ஐவர் பாய் விரித்துட்கார்ந்து கொண்டிருந்தபோது திடீரென்று இடி விழுந்து ஐவரும் மாண்டனர். பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆடு மாடுகளும் மடிந்தன.

* *

கல்கத்தாவில் 10,000 பேர் க்ஷயரோகத்தால் வருந்துகின்றனர். சிறு வயதிலேயே க்ஷய ரோகம் உண்டாவதற்குப் பெண்களைக் கோஷாவாக வைத்திருப்பதும் இளமை மணம் புரிவதுமே காரணம் என்று நகர சபை சுகாதார உத்தியோகஸ்தர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

* *

காலஞ் சென்ற லார்டு சின்ஹ உத்தியோகஞ் செய்து சம்பாதித்ததில் பொருள் ஏதும் மீதமில்லை. வக்கீல் தொழில் புரிந்ததில் மட்டும் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்கள் மீதம் வைத்திருந்தார். அப்பணம் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும், தர்மத்திற்குமாகப் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது.

* *

நான்கு பேர்கள் ஆகாய விமானத்தில் ஏறி உலகத்தை ஒரு முறை சுற்றி வருவதற்கு 40,000 பவுன்கள் வேண்டுமாம்.

* *

ஜெர்மன் [illegible] சாஸ்திரி ஒருவர் சில பூச்சிகளை இரசாயன முறைக்குட்படுத்தி ஒருவித உலோகப் பொருளா[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சாலியர் மகாஜன 1-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

## முதல் நாள் நடவடிக்கைகள்.

சாலியர் மகாஜன முதலாவது மகாநாடு 29-4-28-ல் அருப்புக்கோட்டையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று காலை ஏழு மணிக்கு ஸ்ரீ. பொன்னம்பல விலாஸ் கட்டடத்திலிருந்து மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ. வ. நாயனார், பி.ஏ. பி. எல். அவர்களையும், மகாநாட்டுத் திறப்புவிழா வைபவத்திற்கு வந்திருந்த வடசேரி பிரபல வர்த்தகரும், லிலச்சுவான்தாருமான ஸ்ரீ. அ. ச. சொ. பா. அணைந்தபெருமாள் நாகனார் அவர்களையும் வரவேற்புக் கமிட்டியார் நன்கு வரவேற்று மோட்டார் வாகனத்தில் மேள வாத்தியங்களோடு தொண்டர்கள் அணிவகுத்து முன் செல்ல, முக்கியமான தெருக்கள் வழியாக ஜாகைக்கு அழைத்து வந்தார்கள். வீதிகள் வாழைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன் அக்கிராசனரையும் பிரதிநிதிகளையும் வரவேற்கும் கமான் வளைவுத் தட்டிகள் பல இடங்களில் காணப்பட்டன.

மாலை மூன்று மணிக்கு, மகாநாட்டிற்கென மலையரசன் கோவிலுக் கருகாமையில் அமைத்திருந்த அழகிய சிங்காரப் பந்தலில் மகாநாடு ஆரம்பமாயிற்று. பந்தல் தோரணங்களாலும், கொடிகளாலும், கமுகு, வாழைகளாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் எங்கணும் பெரியார்களின் நீதி வாக்கியங்களும், குல முன்னேற்ற வாக்கியங்களு மடங்கிய போர்டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மகாநாட்டிற்கு நாலு பக்கங்களிலுமிருந்து சுமார் 500 பேர்கள் வரையிலும் விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள், வடசேரி ஸ்ரீமான்கள் வ. அருணாசலம் பி. ஏ., பி. எல்., வி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., வக்கீல், வ. பிச்சாண்டி, நாகர் கோவில் என். சிவதாணு, தக்ஷிணாமூர்த்தி, அ. ராமலிங்கம், சி. வ. அய்யம் பிள்ளை, அமரவிளை வடிவேலு முருகப்பட்டர் ஸ்ரீவில்லிபுத்தூர் எம். வயித்திலிங்கம், நாராயணத் தாகனார், பெ. கோவிந்தன், சிவப்பிரகாசம், முத்துசாமிபுரம் பெருமாள் மூப்பனார், மா. சுந்தர மகாலிங்கம், இராஜபாளையம் எம். பொன்னுசாமி, பெருமாள் மூப்பனார், பொன்னரங்கம், சுந்தர பாண்டியம் வை. சாமியப்பமூப்பனார், சத்திரப்பட்டி ஆர். மாடசாமிமூப்பனார், 'நாடார் குலமித்திரன்' ஆசிரியர் முத்துநாடார், தி. கருப்பையா பிள்ளை, சீனிச்சாமி பிள்ளை, சுப்பையா நாயுடு, சிவசாமி அய்யர் முதலியவர்களும் இன்னும் அநேக பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் ஸ்ரீ. அருணாசல மூப்பனாரால் கடவுள் வணக்கம் வெகு அழகாகப் பாடப்பட்டது. அப்பால் வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீ. கே. பி. கே. சுப்பிரமணியம் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து பொதுநிதிகள், கல்வி, கைத்தொழில், அரசாங்கம், பத்திரிகை ஆகியவை பற்றிப் பொதிந்துள்ள தமது வரவேற்புப் பிரசங்கம் படித்து பிரதிநிதிகளை வரவேற்றார்.

பின்னர் வடசேரி பிரபல வர்த்தகரும், லிலச்சுவான்தாருமான ஸ்ரீ. அணைந்தபெருமாள் நாகனார் அவர்களை மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க ஸ்ரீ அணைந்தபெருமாள் நாகனார் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து கல்வி, ஆசாரம், ஒற்றுமை, சுயமரியாதை, சுதேசியம் மூட பழக்க வழக்கம் ஒழித்தல் ஆகியவற்றில் சாலிய மகாஜனங்கள் கண்ணுங் கருத்துங்கொள்ளவேணுமென்பது பற்றிய தமது பிரசங்கத்தைப் படித்து மகாநாட்டைத் திறந்துவைத்தார். பின்பு வரவேற்புக் கமிட்டித் தலைவர், ஸ்ரீ. வ. நாயனார் பி. ஏ., பி. எல். அவர்களை அக்கிராசனம் வகிக்குமாறு பிரரேபிக்க, அதை ஸ்ரீமான்கள் எம். வயித்திலிங்கம், பொன்னுசாமி முதலியவர்கள் ஆமோதிக்க, நீண்ட கரகோஷத்தினிடையே ஸ்ரீ. நாயனார் அக்கிராசனம் [illegible] மகாஜனங்கள் முன்னேற்றமடைந்து அச்சமூகத்திற்குப் புத்துயிரளிக்க முதன்முதலாக இம்மகாநாடு கூட்டுவித்த அருப்புக்கோட்டை சாலியர் மகாஜனங்களின் பெருந்தகைமையைப் பெரிதும் பாராட்டி கல்வி, கைத்தொழில், வியாபாரம் ஆரோக்கியம், கிளைச் சங்கம் ஆகியவை குறித்த தமது அக்கிராசனப் பிரசங்கம் படித்தார்.

அப்பால் ஸ்ரீ. சுந்தரமகாலிங்கம் "சமுதாய முன்னேற்றம்" என்பது பற்றியும், ஸ்ரீ. வி. எஸ். ராமசாமி "நமது குலத்தவர்களின் நிலைமை" என்பது பற்றியும், ஸ்ரீ. சுப்பிரமணியம் "சாலிய சமூகத்தின் தற்கால நிலைமை" என்பது பற்றியும், ஸ்ரீ. எஸ். சுப்பிரமணியம் "பெண் கல்வி" என்பது பற்றியும், ஸ்ரீ. கருப்பையாபிள்ளை "கல்வியின் அவசியம்" என்பது பற்றியும், ஸ்ரீ. நாகலிங்கம் செட்டியார் "தற்கால நாகரீகம்" என்பது பற்றியும், விரிவாகவும், அழகாகவும் பேசியபின் முக்கியஸ்தர்களுக்கு பூ மாலைகள் சூட்டப்பட்டு இரவு ஏழு மணிக்குக் கூட்டம் கலைந்தது.

## இரண்டாவது நாள் நடவடிக்கைகள்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

30—4—28 மாலை மூன்று மணிக்கு மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளையும், அக்கிராசனரையும் சேர்த்து புகைப்படம் பிடிக்கப்பட்டபின், மகாநாடு ஸ்ரீ. நாயனார் தலைமையின் கீழ் ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்கு முந்திய நாளை விட பிரதிநிதிகள் அதிகம் பேர் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் ஸ்ரீ. ஆ. அருணாசலம் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டபின், "ஸ்ரீவில்லிபுத்தூர் வாசியும். சாலியர் மகாஜன சங்கத்தின் விசேஷ அங்கத்தினரும் பிரபல வர்த்தகருமான ஸ்ரீ. கோபாலந்தாகனார் அவர்களின் அகால மரணத்தைக் குறித்து வருந்துவதுடன் அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தையும் இம்மகாநாடு தெரிவித்துக் கொள்ளுகிறது" என்ற தீர்மானம் நிறைவேறியது. அப்பால் மகாநாட்டிற்கு வரமுடியாது வருந்தி ஸ்ரீமான்கள் குளத்தூரான், பி. சிவதாணு, முத்துத்திருமேனியா பிள்ளை, சந்தனத்தேவர் ஆகியவர்கள் கொடுத்த தந்திகளையும், அ. பெ. ரத்தினவேல் நாடார் எழுதிய கடிதத்தையும் ஸ்ரீ. பி. சுப்பிரமணியம் படித்தார்.

### ஸ்ரீ. கிருஷ்ணன் நாயருக்கு வாழ்த்து.

திவான்பகதூர் எம். கிருஷ்ண நாயர் சென்னை சட்ட அங்கத்தவராக நியமனம் பெற்றதைக் குறித்துப் பாராட்டி வாழ்த்துக் கூறுவதுடன், அவரை நியமனம் செய்த அரசாங்கத்தை இம்மகாநாடு மனமார வாழ்த்துகிறது என்ற தீர்மானம் பின்பு நிறைவேறியது.

### கல்வி வளர்ச்சி.

சாலியர் ஜனசமூகம் கல்வியிலும், கைத்தொழிலும் முன்னேற்ற மடைவதற்கேற்ற சௌகரியங்கள் செய்ய வேண்டுமாய் திருவிதாங்கூர் அரசாங்கத்தாரை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

### உத்தியோகம்.

சாலியர் சமுதாயத்தில் தகுதி வாய்ந்தவர்களை அரசாங்க உத்தியோகத்தில் நியமனம் கொடுப்பதிலும் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்பதவி அளிப்பதிலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமாய் சென்னை, திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

### பிரதிநிதித்துவம்.

ஸ்தல ஸ்தாபனங்களில் நமது சமூகத்தின் பாதுகாப்பிற்காகத் தகுந்தவர்களை அங்கத்தினர்களாக நியமிக்கும்படி இம்மகாநாடு அரசாங்கத்தாரை வேண்டிக் கொள்ளுகிறது.

சென்னை சட்டசபையில் சாலியர் ஜன சமூகத்திற்கு ஒரு பிரதிநிதி ஸ்தானம் கொடுக்க சென்னை அரசாங்கத்தை இம்மகாநாடு வேண்டுகிறது.

திருவிதாங்கூர் சட்ட சபையிலும், ஸ்ரீ. மூலம் பரிபாலன சபையிலும் பிரதி வருடமும் ஒரு பிரதிநிதி ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்று திருவிதாங்கூர் ராஜாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

### கமிஷனுக்கு வரவேற்பு.

அரசர் பெருமானால் நியமனம் செய்யப்பட்ட அரசியல் கமிஷனை இம்மகாநாடு மனப்பூர்வமாக வரவேற்பதுடன், அரசியல் [illegible] ளுக்குள்ள குறைகளை கமிஷன் முன் எடுத்துச் சொல்ல ஒரு கமிட்டியை நியமிக்கிறது.

### சங்க வளர்ச்சி.

சாலியர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்த ஜன சமூகத் தலைவர்களை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

அரசியலிலும், பொதுஜன முன்னேற்றத்திலும் நமது பாத்தியங்களையும் சுதந்திரங்களையும் சீர்தூக்கி விருத்தி செய்ய ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்த இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

சாலியர் மகாஜனங்கள் வசிக்கும் ஒவ்வொரு நகரத்திலும் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த வேணுமாய்த் தீர்மானிக்கிறது.

சாலிய சமூகத்தாரனைவரும் சங்கத்தின் அங்கத்தினராகும்படி இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் வரவேற்புக் கமிட்டிப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ. உ. அ. சுந்தரமகாலிங்கமவர்கள் அடுத்த வருடம் இம்மகாநாட்டை ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டவேண்டியாய் ஸ்ரீவில்லிபுத்தூர் வாசிகள் கேட்பதைத் தெரிவித்தார். அப்படியே அடுத்த வருஷம் இம் மகாநாட்டை ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டுவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

### தலைவர் முடிவுரை.

அக்கிராசனர் முடிவுரையாகப் பேசுகையில், நாம் பிரசங்கங்களைக் கேட்டு, அநேக தீர்மானங்களும் செய்து விட்டோம். ஆனால் பேசுவதும், தீர்மானங்கள் செய்வதும் பெரிதல்ல. நாம் அதன்படி நடந்துகாட்டவேண்டியதுதான் நம் முக்கியமான கடமை. நாம் செய்திருக்கும் தீர்மானங்களின்படி வேலை செய்வதற்கு அநேக இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும், அவற்றைப்பொருட்படுத்தாத நமது நோக்கத்தை விடா முயற்சியுடன் வேலை செய்து நிறைவேற்ற வேண்டும். அருப்புக்கோட்டை வாசிகள், சங்கம் ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் பிரசாரங்கள் நடத்தி, போதுமான வேலை செய்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச்செலுத்துகிறேன் என்று பேசி முடித்தார். கடைசியாக வந்திருந்த கனவான்களுக்கும், அக்கிராசனருக்கும் பிரதிநிதிகளுக்கும் புஷ்பஹாரங்கள் சூட்டப்பட்டு இரவு ஒன்பது மணிக்கு மகாநாடு இனிது முடிவடைந்[illegible]

# மருத்துவ மஞ்சரி.

## வைத்தியர் வெங்கடாசல முதலியார் எழுதுவது.

**சூடல் வெப்பந் தணிய:**—போஜன பதார்த்தங்களில் குழம்பு, கூட்டு, கீரை, முதலியவற்றை நெய், எள்ளெண்ணெய், மணிலா எண்ணெய், முதலியவற்றால் தாளிதம் செய்யாமல் ஆமணக்கு எண்ணெய் விட்டுத் தாளிதம் செய்து சிறு கடுகையுடன் உட்கொண்டு வர குடல் வெப்பம் தணிந்து, மலசல, உஷ்ணம் நீங்கி, மலாசயம் சுத்தியாகி தேகாரோக்கியம் உண்டாகும்.

சிலருக்கு ஆரம்பத்தில் இது சிறிது பிடியாதிருக்கலாம். நாவின் ருசியைக் கவனியாது தேக சுகத்தைக் கவனிப்பார்க்கு இது மிக்க பயன் தரத்தக்கதாம்.

**நினைவு சிரங்கு தணிய:**—இரும்புச் சட்டியில் ஆமணக்கு எண்ணெய் விட்டுக் காய்ச்சி, இதில் சிறுகத் அரிந்த சிறிய வெங்காயம், பசு முன்னைத் தழை தனித்தனி கைப்பிடி ஒன்று, கசகசா கைப்பிடி அரை இவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சிவக்கவும் தீய்ந்து போகாமலும் வதக்கி மணம் வரும் பதத்தில் பனங்கற்கண்டு கொஞ்சம் கூட்டிக் கிளறி ஆறவிட்டு இளஞ் சூடு கையில் உட்கொள்ளவேண்டும். இவ்விதம் ஞாயிற்றுக் கிழமையில் மாத்திரமாக மூன்று ஞாயிறு செய்து உட்கொண்டுவரின், நினைவு சிரங்கு, இரத்தக்கொதிப்பு, மலத்திலும் ஜலத்திலும் வெப்பம், உஷ்ண வயிற்றுவலி முதலியன குணமாம்.

சில தேகிகட்கு இது ஒருமுறைபேதியாகலாம். சில தேகிகட்குப் பேதியாகாமலே வாயுவைக் கலைத்து உஷ்ணத்தைத் தணிக்கலாம். இவ்விதமே அடுத்துச் சில வாரங்கள் செய்து உட்கொண்டுவர, இரத்தத்தின் உஷ்ணந் தணிந்து நினைவு முதலிய சர்ம வியாதிகள் குணமாகிவிடும்.

**இரத்த சுத்தியாக:**—நிசித் தண்ணீர் என்னும் நீராகாரம் அரைக்கால்படி, நல்ல சுத்தமான புதிய தேன் வீசம்படி இரண்டும் கலந்து (நீர்மோர் விளாவுதல் போல்) ஒரு கிண்ணத்திலிருந்து மறு கிண்ணத்திற்குப் பலமுறை மாற்றி மேல் வரும் நுரையை நீக்கிவிட்டு உட்கொள்ளவேண்டும். இவ்விதம் உதய காலத்தில் பிரதிதினமும் உட்கொண்டுவரின் இரத்தத்திலுள்ள வாத, பித்தக் கொதிப்புகள் நீங்கி இரத்த சுத்தியும் தேக வன்மையும் ஆண்மைத் தன்மையும் உண்டாகும். இதை மாற்றிமாற்றி ஆற்றும் பாத்திரங்கள் மண், கண்ணாடி, பீங்கான் பாத்திரங்களாகவே இருத்தல் வேண்டும், அலுமினியம், பித்தளை, தாமிரம், வெண்கலம் முதலிய லோக பாத்திரங்கள் அறவே கூடா.

**வாய்வேக்காடு தீர:**—முற்றிய தேங்காயைத் திருகிப் பால் பிழிந்து இரவு போஜனத்தில் சாதத்துடன் தாராளமாய் விட்டு சிறுக சீனி, சர்க்கரை கூட்டிப் புசித்துவரலாம். இரவு போஜனம் முழுவதும் தேங்காய்ப் பாலே யிருத்தல் நலம். பிடியாதோர் இரண்டாமுறை சாதத்திற்கேனும் மேற்படி தேங்காய்ப்பால் அரைக்கால் படிக்குக் குறையாமல் கால்படிவரையில் சேர்த்து உட்கொண்டுவரின் ஒரு வாரத்தில் வாய் வேக்காடு, நாவு வெடிப்பு, தொண்டைப்புண் முதலியன குணமாம்.

சில பித்த தேகிகட்டு வாயில் நீர்ச் சுரப்புக் காணலாம். இத்தகையோர் மறுநாள் காலை தோறும் எலுமிச்சை ஊறுகாய் ஒன்றிரண்டு பத்தைகளை காலை ஆகாரத்தோடேனும், தனியாக வேனும் உண்டு, பின் சாத நீர்த்தம் எனும் நீராகாரம் அரைக்கால்படி உட்கொள்ளலாம்.

**தொண்டைப்புண் நீங்க:**—மணத்தக்காளிக்காய் அல்லது மணத்தக்காளிக் கீரையைப் பயற்றம் பருப்புடன் கூட்டிப் பாகம் செய்து பகல் போஜனத்தில் சேர்த்துப் புசித்து வரத் தொண்டைப்புண், நாவு வெடிப்பு, வாய் வேக்காடு முதலியன குணமாம்.

இத்துடன் வெங்காயம் சேர்த்துச் சமைத்தல் மிக்க நலம். இது வேண்டாதார் நீக்கிவிடலாம்.

**வாயில் இரத்தம் வருதல் தீர:**—சில தேகிகட்குப் பல் தேய்க்கையிலும், ஏனைய சமயத்தும் பல் சந்துகளினின்று இரத்தம் வரலாம். மற்றுஞ் சிலருக்குக் காறி உமிழும் போதும் இருமும்போதும் வாந்ியெடுக்கும்போதும் இரத்தம் உள்ளிருந்து வரலாம். இத்தகைய தேகிகள் வாழைப்பூ, அகத்திக் கீரை, தேங்காய்ப் பால், மணத்தக்காளிக்காய் அல்லது கீரை இவற்றை அடுத்தடுத்து உபயோகித்துவரின் மேற்படி இரத்தங்காணும் நோய் குணமாம்.

**மலச் சிக்கல் தீர:**—முள்ளங்கிக் கிழங்கை, கூட்டு, குழம்பு, பொடி முதலிய ஏதாவது பாகமேனும் செய்து பகலில் மாத்திரம் உபயோகித்து வர சிறுகச் சிறுக மலச்சிக்கல் தணியும்.

முள்ளங்கித் தழையையும் மேல் கண்டவாறே சமைத்துப் பகலில் மட்டும் உபயோகிக்கலாம். இதுவும் உஷ்ணபித்த சாந்தி செய்ய வல்லது. முள்ளங்கித் தழையின் குண[illegible] அறியாது பெரும்பாலோர் அதைத் தள்ளிவிடுகின்றனர். முள்ளங்கிக் கிழங்கின் குணமே இத்தீரைக்கும் உண்டு.

முள்ளங்கியைத் திருகு பலகையில் திருகிப் பயற்றம் பருப்புக் கூட்டி ஊறவைத்துப் பின் பச்சை மிளகாய், கொத்துமல்லித்தழை, தேங்காய்த் திருகல், உப்புக் பொடி சேர்த்து (வாழைக்காய் பொடி, புட்டு செய்தல் போன்று) பொடி செய்தும் உபயோகிக்கலாம்.

இவ்வாறே முள்ளங்கிக் கீரையையும் பாகம் செய்து கொள்ளலாம்.

முள்ளங்கி பிடியாதோர் இதைக் கவனிக்க வேண்டியதில்லை.

**மலபந்தம் நீங்க:**—அத்திக்காயை இளம் பிஞ்சுகளாக வாங்கி வாரத்தில் மூன்று நான்கு முறை சமயல் செய்து போஜனத்துடன் தாராளமாகச் சேர்த்துப் புசித்து வருவோர்க்கு மலக்குடல் வெப்பந்தணிந்து மலபந்தரோகம் சிறுகச் சிறுக நிவாரணமாகும். உஷ்ண தேகிகட்கு மிக்க பயன்தரும் பதார்த்தங்களுள் [illegible] ஒன்று.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### ஏழாம் அத்தியாயம்.

#### 3. ஒரு பெண்மணியின் தீரம்.

இப்போது மிஸ்டர். எஸ்கோம்பினிடமிருந்து எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. மற்றவர்களுடன் சேர்ந்து கரையிலிறங்க வேண்டாமென்றும், மாலை வரையில் பொறுத்திருக்கும்படியும், என்னைப் பத்திரமாய் வீடு கொண்டு போய்ச் சேர்ப்பதற்குக் கடற் போலீஸ் தலைவரை அனுப்புவதாகவும், ஆனால் என் குடும்பத்தார் எப்போது வேண்டுமானாலும் இறங்கிப் போகலாமென்றும் அவர் சொல்லி அனுப்பியிருந்தார். சட்டப்படி இது கட்டளையாகாது. என்னை இறங்க அநுமதிக்க வேண்டாமென்று கப்பற்றலைவருக்கு யோசனையும், இறங்கினால் அபாயம் காத்திருக்கிறதென்று எனக்கு எச்சரிக்கையுமேயாகும். ஆனால் என்னைக் கட்டாயப்படுத்தி இறங்காமல் தடுப்பதற்குக் கப்பற்றலைவருக்கு அதிகாரம் கிடையாது. எனினும் நான் மேற்படி யோசனையை ஏற்றுக் கொள்ளுவதே உசிதமென்னும் முடிவுக்கு வந்தேன். என் மனைவி மக்களை என்னுடைய சொந்த வீட்டுக்கு அனுப்புவதற்குப் பதிலாக எனது பழைய நண்பரும் கட்சிக்காருமான பார்ஸி ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு அனுப்பி வைத்தேன். அவர்களை அங்கு வந்து சந்திப்பதாகச் சொன்னேன்.

பிரயாணிகள் எல்லோரும் இறங்கிய பின்னர், தாதா அப்துல்லாவின் வக்கீலும் எனது நண்பருமான மிஸ்டர் லாப்டன் கப்பலுக்கு வந்து என்னைப் பார்த்தார். நான் ஏன் இன்னும் இறங்கவில்லை யென்று அவர் வினவினார். மிஸ்டர் எஸ்கோம்பின் கடிதத்தைப் பற்றி அவரிடம் சொன்னேன். சாயங்காலம் வரையில் காத்துக் கொண்டிருந்து இரவில் திருடன் அல்லது குற்றவாளியைப் போல் நகரில் நுழைவது அவருக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் பயமாயிராவிட்டால் தம்முடன் அக்கணமே புறப்பட்டு வரும்படியும், எதுவுமே நடவாதது போல் நாங்கள் கால்நடையாக நகருக்குள் செல்ல வேண்டுமென்றும் அவர் கூறினார். "நான் பயப்படுகிறேனென நினைக்கவில்லை. மிஸ்டர் எஸ்கோம்பின் யோசனையை கிராகரித்தல் உசிதமாகுமா என்பது தான் கேள்வி. இவ்விஷயத்தில் கப்பற்றலைவருக்கு ஏதேனும் பொறுப் புண்டா என்றும் நாம் சிந்திக்க வேண்டும்" என்று நான் சொன்னேன்.

#### மிஸ்டர் லாப்டனின் யோசனை.

மிஸ்டர் லாப்டன் புன்னகை புரிந்து கூறியதாவது:—"மிஸ்டர் எஸ்கோம்பின் யோசனையை மதித்து நடப்பதற்கு அவர் உங்களுக்கு என்ன செய்து விட்டார்? அவர் உங்களிடமுள்ள பிரியத்தினால் கூறுகிறாரென்றும், வேறு அந்தரங்க நோக்கத்துடன் கூறவில்லை யென்பதற்கும் ஆதாரமென்ன இருக்கிறது? பட்டணத்தில் என்ன நடந்ததென்பதைப் பற்றி உங்களை விட எனக்கு அதிகம் தெரியும். அந்நிகழ்ச்சிகளுக்கு மிஸ்டர் எஸ்கோம்ப் எவ்வளவு தூரம் காரண பூதரானவர் என்பதையும் அறிவேன்."

நான் தலையை யசைத்துக் குறுக்கிட முயன்றேன். ஆனால் அவர் விடாமல் மேலும் சொன்னதாவது:—"அவர் சிறந்த நோக்கங்களுடன் சொல்வதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் அவருடைய யோசனையின்படி நீங்கள் நடந்தால் பெரிதும் அகௌரவத்துக் காளாவீர்களென்று நான் திட்டமாக அபிப்பிராயப் படுகிறேன். ஆதலின் நீங்கள் ஆயத்தமாயிருந்தால் இப்போதே என்னுடன் புறப்பட்டு வாருங்கள். கப்பற்றலைவர் நம்முடைய மனிதர். அவருடைய பொறுப்பு உண்மையில் நம்முடையதே யாகும். அவர் தாதா அப்துல்லா கம்பெனிக்கே பதில் சொல்லவேண்டியவர். அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எனக்கு நன்கு தெரியும். இப்போராட்டத்தில் அவர்கள் அரிய தைரியம் காட்டிவந்திருக்கிறார்கள்."

"அப்படியானால் போவோம். நான் ஆயத்தம் செய்யவேண்டிய தெதுவமில்லை. தலைப்பாகையை வைத்துக் கொண்டு கிளம்பவேண்டியதுதான். கப்பற்றலைவரிடம் சொல்லிவிட்டுப் புறப்படுவோம்" என்றேன். அவ்வாறே கப்பற்றலைவரிடம் விடைபெற்றுக் கொண்டோம்.

மிஸ்டர் லாப்டன் டர்பனில் பெயர் பெற்ற ஆட்வோகேட். இந்தியா திரும்புவதற்கு முன்னமே அவருடன் நெருங்கிப்பழகி யிருந்தேன். கஷ்டமான வழக்குகளில் அவரை நான் கலந்து கொள்வதுண்டு. பல முறை அவரை என் வழக்குகளில் பெரிய (ஸீனியர்) வக்கீலாக அமர்த்தி யிருக்கிறேன். அவர் நல்ல தீரர், திடகாத்திர தேக முள்ளவர்.

#### தடுத்தாட் கொண்டார்.

நகரின் முக்கியமான வீதி வழியே நாங்கள் போகவேண்டி யிருந்தது. நாங்கள் புறப்பட்டபோது மாலை நாலரை மணி இருக்கும். வானத்தில் மேகங்கள் சூழ்ந்து சூரியனை மறைத்திருந்தன. ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு நடந்து செல்லக் குறைந்தது ஒரு மணி நேரம் பிடிக்கும். கடற்கரையில் சாதாரணமாய் எப்போதும் காணக்கூடிய அளவுக்கு மேல் ஜனங்கள் அதிகமாயில்லை. நாங்கள் இறங்கியதும் சிறுவர் சிலர் எங்களைப் பார்த்தார்கள். ஒரு தனி விதமான தலைப்பாகை தரித்த இந்தியன் நான் ஒருவனே யாதலால், அவர்கள் உடனே என்னை இன்னானென அறிந்து 'காந்தி' 'காந்தி' 'அடி' 'குத்து' என்று கூச்சலிட்டுக் கொண்டு எங்களருகே வந்தார்கள். சிலர் கூழாங்கற்களை எங்கள் மீது விட்டெறிந்தார்கள். வயது முதிர்ந்த வெள்ளைக்காரர் சிலரும் அப்பையன்களுடன் சேர்ந்துகொண்டனர். வரவரக் கலகக்காரர் கூட்டம் பெருகி வந்தது. கால் நடையாகச் செல்வது அபாயம் என்று மிஸ்டர் லாப்டன் எண்ணினார். ஆதலின் ரிக்ஷாவண்டி ஒன்றைக் கூவி அழைத்தார். மனிதர்கள் இழுக்கும் வண்டியில் உட்காருதல் எனக்குப் பெரும் அருவருப்பை அளித்தபடியால், இதற்கு முன் நான் ரிக்ஷாவில் ஏறியதே கிடையாது. ஆனால் இப்போது அவ்வண்டியில் உட்காருதல் என் கடமையென்று கருதினேன். பகவான் எவனைக் காப்பாற்றத் திருவுளங்கொண்டு விட்டாரோ, அவன் விரும்பினாலும் பாவக் குழியில் விழ முடியாதென்பதை என் வாழ்நாள் அநுபவத்தில் ஐந்தாறு முறை அறிந்திருக்கிறேன். இம்முறையும் நான் விழுந்து படவில்லை யென்றால் அதன் பொருட்டு என்னைச் சிறிதும் பாராட்டிக் கொள்வதற்கில்லை. ரிக்ஷாக்களை இழுப்போர் ஸுலூ சாதியார். வெள்ளைக்காரர்கள்—பெரியவர்களும் சிறுவர்களும்—ரிக்ஷா ஓட்டியைப் பயமுறுத்தினார்கள். அவனுடைய ரிக்ஷாவில் என்னை ஏற்றிக் கொண்டால் அவனை அடித்துப் போடுவதுடன் ரிக்ஷாவையும் உடைத்து நொறுக்கிவிடுவோமென்று சொன்னார்கள். ஆகவே ரிக்ஷா சிறுவன் "இல்லை இல்லை" என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தான். இவ்வாறு ரிக்ஷா ஏறும் அவமானத்திலிருந்து நான் தப்பினேன்.

#### உயிர் ஆசை இழந்தேன்.

கால் நடையாகச் செல்வதையன்றி இப்போது எங்களுக்கு வேறு வழியில்லாமல் போயிற்று. ஜனக் கூட்டம் எங்களைத் தொடர்ந்து வந்தது. நாங்கள் ஒவ்வோரடி எடுத்து வைப்பதற்குள்ளும், கூட்டம் பெருகிக்கொண்டேயிருந்தது. மேற்கு வீதியை நாங்கள் அடைந்தபோது கூட்டம் பிரமாண்டமாகி விட்டது. திடதேகியான ஒருவன் மிஸ்டர் லாப்டனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஆதலின் அவர் என்னருகில் வர இயலவில்லை. கூட்டத்தினர் என்னைத் திட்ட ஆரம்பித்தார்கள். கற்களையும், மற்றும் கையிலகப்பட்ட பொருள்களையும் அவர்கள் என்மீது சொரியலானார்கள். தலைப்பாகையைத் தட்டிக் கீழே எறிந்தார்கள். இதற்குள் தடியன் ஒருவன் வந்து என் முகத்திலறைந்தான். பின்னர் என்னை உதைத்தான். நான் உணர்வற்றுக் கீழே விழப் போகும் தருணத்தில் அருகிலிருந்த வீட்டின் வாசற் கம்பிகளைப் பிடித்துக்கொண்டேன். சற்று மூச்சு விட்ட பின்னர் மயக்கம் தெளிந்தது. பின்னர் என் வழியே மீண்டும் போகத் தொடங்கினேன். வீட்டுக்கு உயிருடன் போய்ச் சேரலாம் என்னும் ஆசையை அநேகமாக இழந்துவிட்டேன். ஆனால் அப்போதும் என்னைத் தாக்கியவர்கள் மீது எனக்குக் குரோதம் பிறக்கவில்லை யென்பது நன்றாக ஞாபகமிருக்கிறது.

இவ்வாறு நான் சென்று கொண்டிருக்கையில் டர்பன் போலீஸ் சூபரிண்டெண்டெண்டின் மனைவி எதிர் புறத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். நாங்கள் ஒருவரை யொருவர் நன்கறிவோம். அவர் தீரமுள்ள பெண்மணி. அப்போது வானம் மேகங்கள் சூழ்ந்தும், சூரியன் அஸ்தமிக்கும் சமயமாகவும் இருந்தபோதிலும், அவர் என்னைப் பாது காப்பதற்காகத் தம்முடைய குடையைப் பிரித்துப் பிடித்துக் கொண்டு என் பக்கத்தில் நடந்து வரலானார். பெண்மணி ஒருவரை—அதிலும் ஜனங்களின் பிரியத்துக்குப் பாத்திரரான போலீஸ் தலைவரின் மனைவியை வெள்ளைக்காரர்கள் அவமதிக்க விரும்பவில்லை. அவரைத் துன்புறுத்தவும் பிரியப் படவில்லை. ஆதலின் அவர்மீது படாமல் என்னை அடிக்க முயன்றார்கள். இக்காரணத்தினால், அப்பெண்மணி என்னருகே வந்த பின்னர் நான்பட்ட அடிகள் அவ்வளவு பலமானவை யல்ல. இதற்குள் நான் தாக்கப்படும் செய்தி அறிந்த போலீஸ் தலைவர் என்னைப் பாதுகாக்கப் போலீஸ் சேவகர் சிலரை அனுப்பினார். அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு வந்தார்கள். வழியில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. நாங்கள் அங்கடைந்தபோது போலீஸ் தலைவர் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவர் போலீஸ் ஸ்டேஷனில் எனக்கு அடைக்கலம் தருவதாகக் கூறினார். ஆனால் இதை நான் வந்தனத்துடன் மறுதலித்து விட்டுச் சொன்னதாவது:—"நான் எவ்விடத்துக்குப் புறப்பட்டேனோ அவ்விடம் சேரவேண்டும். டர்பன் வாசிகளின் நியாய உணர்ச்சியிலும், அவ்வாறே என்னுடைய கட்சியின் நீதியிலும் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். என்னைப் பாதுகாக்கப் போலீஸ் சேவர்களை அனுப்பியதற்காக மிகவும் வந்தனம். மிஸஸ் அலெக்ஸாண்டருக்கும் நான் கடமைப் பட்டிருக்கிறேன்."

#### போலீஸ் தலைவர் யுக்தி.

அதன் பின்னர் தொல்லை எதுவுமின்றி ரஸ்டம்ஜியின் வீடு சேர்ந்தேன். இதற்குள் சாயங்காலம் ஆகிவிட்டது. "கோர்லாண்ட்" கப்பல் வைத்தியரான டாக்டர் தாதிபர் ஜார் ரஸ்டம்ஜியின் வீட்டில் இருந்தார். அவர் எனக்குச் சிகிச்சை செய்தார். என்னுடைய காயங்களைப் பரிசோதித்தார். காயங்கள் அதிகமில்லையாயினும், ஒன்று மட்டும் நிரம்ப வலித்தது. ஆனால், நான் அமைதி பெறும் காலம் இன்னும் வரவில்லை. ரஸ்டம் ஜியின் வீட்டுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான வெள்ளைக்காரர்கள் கூடியிருந்தார்கள். இரவானதும் காலாடிகளும் கூட்டத்தில் சேர்ந்துகொண்டனர். கூட்டத்தார், என்னை அவர்களிடம் ஒப்புவியா [illegible] வீட்டையும் என்னுடன் சேர்த்து எரித்து விடுவோமென்று அவருக்குச் சொல்லியனுப்பினார்கள். ரஸ்டம்ஜி உண்மை இந்தியர் ஆனதால் இதற்குப் பயப்படவில்லை. நிலைமை இவ்வாறிருக்கிறதென்று போலீஸ் தலைவர் அலெக்ஸாண்டருக்குத் தெரிய வந்தவுடன் அவர் துப்பறிவோர் சிலருடன் அமைதியாக வந்து கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் ஒரு விசுபலகை கொண்டுவரச் செய்து அதன்மேல் ஏறி நின்றார். இவ்வாறு கூட்டத்தாரிடம் பேசும் பாவனையில், எவரும் ரஸ்டம்ஜியின் வீட்டு வாயிற் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போகமுடியாதபடி காவலாக நின்று கொண்டார். முன்னரே, தகுந்த இடங்களில் அவர் துப்பறிவோரை நிறுத்தியிருந்தார். மற்றும், அவர் வந்தவுடனே, தமது உத்தியோகஸ்தர் ஒருவரை முகத்தில் வர்ணம் பூசிக் கொண்டும், இந்திய உடை தரித்துக் கொண்டும், இந்திய வியாபாரியைப் போல் வேஷம் பூண்டு உள்ளே வரச் செய்தார். அவர் மூலம் எனக்குப் பின்வரும் செய்தியைச் சொல்லியனுப்பினார்:—"உங்கள் நண்பரையும் அவர் விருந்தினரையும், சொத்துக்களையும், உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்ற விரும்பினீர்களாயின் என்னுடைய யோசனையைக் கேளுங்கள். இந்தியப் போலீஸ் சேவகனைப்போல் வேஷந் தரித்துக்கொண்டு ரஸ்டம்ஜியின் சாமான் கிடங்கு வழியாகத் தெருவுக்கு வந்து என்னுடைய ஆளுடன் கூட்டத்தில் புகுந்து சென்று போலீஸ் ஸ்டேஷன் சேருங்கள். தெரு முனையில் வண்டி உங்களுக்காகக் காத்திருக்கிறது. உங்களையும் மற்றவர்களையும் நான் காப்பாற்றுவதற்கு இந்த ஒரு வழிதான் இருக்கிறது. கூட்டத்தில் ஆவேசம் அதிகமிருப்பதால் அதைக் கட்டுக்குள் கொண்டுவர என்னால் ஆகாது. என் யோசனையின்படி நீங்கள் உடனே நடக்கவில்லை யென்றால், ஜனக் கூட்டம் ரஸ்டம்ஜியின் வீட்டைத் தரையோடு தரையாக்கி விடுமென அஞ்சுகிறேன். அப்படி நேர்ந்தால் எவ்வளவு உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்படும் என்று என்னால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை".

---

## ம தி ப் பு ரை.

### "சுதந்திரன்".

இப் பெயர் கொண்ட பத்திரிகை தற்போது தனது முதலாண்டை முடித்து இரண்டாவதாண்டைக் கொண்டிருக்கிறது. இது ரங்கூனினின்றும் ஸ்ரீமான் சு. நா. சுந்தர முதலியாரவர்கள் பத்திராதிபத்தியத்தின் கீழ் வெளிவந்துலவுகின்றது. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சு. நா. சுந்தர முதலியாரவர்கள் அருப்புக்கோட்டைத் தலைவரும், எமக்கு நண்பருமாவர். இன்னார் தளரா ஊக்கமுடையார். காந்தி வழி பற்றி சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை என்பதைக் கடைப்பிடித்து அவ் வழி ஒழுகவில் எத்தகைய இடுக்கண் நேரினும் அஞ்சா நெஞ்சுடையார் என்று வெளிப்படையாக முன்பு சிறை புக்கி வெளி வந்தவர். சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி வீரர்களில் இவரும் ஒருவர் என்கலாம். இன்னார் தன்னேங்கிற்கொப்ப "சுதந்திரன்" என்னும் பத்திரிகை யாரம்பித்து சுதந்திரக் கொடி நாட்டப் பாடு படுவதை யாம் மிகவும் போற்றுகிறோம். இப் பத்திரிகை யாரம்பித்தது முதல்பர்மாவில் உணர்ச்சி பரப்பி பல அரிய காரியங்கள் சாதித்திருப்பதாக அறிகிறோம். இது நீடு வாழ்க. பக்கங்கள் 16 கொண்டது. வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் 5—0—0ம், வெளி நாட்டுக்கு ரூபாய் 6—0—0 மாகும். தேவையுள்ளோர், "மானேஜர், "சுதந்திரன்" ஆபீஸ், 39—37-வது வீதி, ரங்கூன்" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

---

இதந்தரும் வழி என்னென
[வினவின்
சுதந்திர வழியெனச் சொல்
[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection